விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
## Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 26
ஒலி 172 வள்ளுவர் ஆண்டு 2056 வைகாசி 26 திங்கட்கிழமை (09.06.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

உங்கள் ஆரோக்கியம் எமது நோக்கம்
Royal றோயல் சுத்தமான தேன்


ஆய்வுகூடத்தில் தரம் பரிசோதிக்கப்பட்டு பொதியிடப்படுகிறது.
Marketed By:- (C-3157)
சிவா நறுமணப் பூங்கா ®
இல.288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே : 021 2222 567

## தனியார் காணியிலிருந்து துப்பாக்கிகள் மீட்பு



வவுனியாவில் பரபரப்பு

11ஆம் பக்கம் பார்க்க

## இந்தியாவுடன் செய்த இரகசிய ஒப்பந்தம் என்ன?

அநுர அரசின் குடுமியை பிடிக்கிறது எதிர்க்கட்சி 12ஆம் பக்கம் பார்க்க

## ஜனாதிபதி அநுர ஜேர்மனி பயணம்




07ஆம் பக்கம் பார்க்க

## கொவிட் திரிபு குறித்து அச்சப்படத் தேவையில்லை

### சுகாதார அமைச்சு அறிவிப்பு

(கொழும்பு)

கொவிட் - 19 இன் புதிய திரிபின் தாக்கம் குறித்து வீணாக அச்சமடையத் தேவையில்லை என சுகாதார அமைச்சு அறிவுறுத்தியுள்ளது.

இதுகுறித்து சுகாதார 15ஆம் பக்கம் பார்க்க

## வடக்கில் மழைக்கு வாய்ப்பு

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்தின் சில பகுதிகளுக்கு எதிர்வரும் 15ஆம் பக்கம் பார்க்க

## புதிய எரிபொருள் களஞ்சியசாலை காங்கேசன்துறையில் அங்குரார்ப்பணம்

(காங்கேசன்துறை)

யாழ்ப்பாணம், காங்கேசன்துறையில் மிக விரைவில் எரிபொருள் களஞ்சியசாலையில் எரிபொருட்களை சேகரிக்கும் பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ள நிலையில் நேற்று ஞாயிற்றுக்கிழமை (08) புதிய எரிபொருள் களஞ்சியசாலை அங்குரார்ப்பண நிகழ்வு இடம்பெற்றது.

போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் 15ஆம் பக்கம் பார்க்க

## ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் கூட்டத் தொடர்

### இம்மாதம் 16ஆம் திகதி ஆரம்பம்

(ஜெனிவா)

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 59 ஆவது கூட்டத்தொடர் இம்மாதம் 16ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகி, ஜூலை மாதம் 9ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித 15ஆம் பக்கம் பார்க்க

## சர்வதேச விசாரணைக்கு வலுச்சேர்க்க


# வருகிறார் ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர்

### வடக்குக்கும் விஜயம்

(யாழ்ப்பாணம்)

உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் வோல்கர் டேர்க் இலங்கைக்கு வருகை தரவுள்ளார். இந்த விஜயமானது எதிர்வரும் 23ஆம் திகதி இடம்பெறவுள்ளது.

(16ஆம் பக்கம் பார்க்க)



## தமிழரசுக் கட்சி உறுப்பினர்கள் நேற்று சத்தியப்பிரமாணம்

(யாழ்ப்பாணம்)

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் யாழ்.மாவட்ட உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களின் சத்தியப்பிரமாண நிகழ்வு நேற்று ஞாயிற்றுக்கிழமை நல்லூர் இளங்கலைஞர் மண்டபத்தில் இடம்பெற்றது.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பதில் தலைவர் சி.வி.கே.சிவஞானம், பதில் பொதுச் செயலாளர் எம்.ஏ.சுமந்திரன், நிர்வாகச் 16ஆம் பக்கம் பார்க்க



## இல்லாத வீட்டுக்கு நட்டஈடு பெற்ற சமல்

### எந்நேரமும் கைதாகலாம்

(கொழும்பு)

இல்லாத கிணற்றுக்கு பணம் பெற்ற நடிகர் வடிவேலுவின் "கிணற்றைக் காணோம்" நகைச்சுவைப் பாணியில் இல்லாத வீட்டுக்கு 15ஆம் பக்கம் பார்க்க

### காங்கேசன்துறை – கொழும்பு

## புகையிரத பொதிகள் சேவை 35 ஆண்டுகளின் பின் மீள ஆரம்பம்



(காங்கேசன்துறை)

காங்கேசன்துறை முதல் கொழும்பு வரையிலான புகையிரதப் பொதிகள் சேவைகள் 35 ஆண்டுகளுக்குப் பின்னர் நேற்று ஞாயிற்றுக்கிழமை (08) மீள ஆரம்பித்து 15ஆம் பக்கம் பார்க்க

## வவுனியா பூம்புகாரில் இளைஞன் சடலமாக மீட்பு

(வவுனியா)

வவுனியா பூம்புகார்ப் பகுதியில் இளைஞன் ஒருவரது சடலம் சுருக்கிட்ட நிலையில் மீட்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது,

நேற்றுக்காலை 22 வயதுடைய குறித்த இளைஞனைக் காணவில்லை என வீட்டார் தேடியபோது வீட்டின் முன்பாகவுள்ள 16ஆம் பக்கம் பார்க்க

அன்பு வாசகர்களே!
இன்று திங்கட்கிழமை முதல் புருசோத்தமன் எழுதும்

### புதுச்சேரிப் பயணம்

தொடர் கட்டுரை உங்கள் வலம்புரியில் வாசிக்கத் தவறாதீர்கள்
(ஆ-ர்)

## முறைகேடாக கைதிகள் விடுதலை ஆணையாளரிடம் வாக்குமூலம்

(கொழும்பு)

ஜனாதிபதியின் பொதுமன்னிப்பை முறைகேடான வகையில் பயன்படுத்தி ஒருசில சிறைக்கைதிகள் வெசாக் தினத்தன்று விடுவிக்கப்பட்டுள்ளமை விசாரணைகளில் வெளிவந்துள்ளது.

இந்த முறைகேடான செயற்பாட்டுடன் தொடர்புடைய சிறைச்சாலை அதிகாரிகள் உட் பட அதனுடன் தொடர்புடைய சகல உத்தியோகத்தர்களுக்கும் எதிராக குற்றப்புலனாய்வுத் திணைக்களம் 16ஆம் பக்கம் பார்க்க

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுன்னாகம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)

## வெளிவாரி ஆட்சேர்ப்பு விண்ணப்பம் கோரல்

சுன்னாகம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் கீழ்வரும் பதவிகளுக்கு தகமையுள்ள விண்ணப்பதாரிகளிடம் இருந்து விண்ணப்பம் கோரப்படுகின்றது.

வயது எல்லை 18 - 45 வரை. (கூட்.சங்கங்களில் பணிபுரியும் நிரந்தர நியமனம் பெற்ற பணியாளருக்கு வயது எல்லை பார்க்கப்படமாட்டாது) என்பதுடன் கூட்டுறவு சங்க பணியாளர் தங்களின் சங்கத்தின் ஊடாக விண்ணப்பித்தல் வேண்டும்.

### 01. பதவி:- உள்ளகக் கணக்காய்வாளர் வெற்றிடம் :- 01

குறியீட்டு இலக்கம் :- 105/06

சம்பள அளவுத்திட்டம் :- 37045-490x10-540x10-47345, 444540-5880x10-6480x10-568140 (02/2025 சுற்றுநிருபம்), ஏனைய கொடுப்பனவுகள்கூட்.ஊழி.ஆணைக்குழு சுற்றுநிருபத்திற்கு அமைய வழங்கப்படும்.

தகைமைகள்:-

அ. கூட்டுறவு ஊழியர் 7வது சம்பளத் திட்டப் பதவியில் முகாமை நிலைப் பதவியில் ஆகக்குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம். /கூட்டுறவு ஊழியர் 8 ஆவது சம்பளத்திட்டப் பதவியில் முகாமை நிலைப்பதவியில் ஆகக் குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம்.

அல்லது

ஆ. இலங்கைத் தொழில் நுட்பக் கல்லூரியின் கணக்கியலிலான டிப்ளோமா/ இதற்குச் சமமான தகைமை/ மாகாண கூட்டுறவுப்பயிற்சி நிறுவனத்தினால்/ தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவனத்தினால் (NICD) நடாத்தப்பட்ட கூட்டுறவு டிப்ளோமா பரீட்சையில் சித்தி.

அல்லது

இ. கூட்டுறவு ஊழியர் உயர் தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தியுடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில் கணக்கியல்/ கணக்காய்வு துறையில் ஆகக் குறைந்தது 06 ஆண்டு கால அனுபவம்/அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/ கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் கணக்கியல்/ கணக்காய்வுக் களங்களில் மேற்பார்வை நிலைப் பதவியொன்றில் ஆகக்குறைந்தது 06 ஆண்டு கால அனுபவம்.
க.பொ.த.உயர் தரப்பத்திர பரீட்சையில் கணக்கியல் உட்பட 03 பாடங்களுடனான சித்தியுடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில் கணக்கியல்/ கணக்காய்வு துறையில் ஆகக் குறைந்தது 07 ஆண்டு கால அனுபவம்/ அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/ கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் கணக்கியல்/ கணக்காய்வுக் களங்களில் மேற்பார்வை நிலைப் பதவியொன்றில் ஆகக் குறைந்தது 07 ஆண்டு கால அனுபவம்.

### 02. பதவி:- உற்பத்தி முகாமையாளர் வெற்றிடம் :- 01

குறியீட்டு இலக்கம் :- 107/07

சம்பள அளவுத்திட்டம் :- 36125-475x10-500X10-45875, 433500-5700X10-6000X10-550500 (02/2025 சுற்றுநிருபம்), ஏனைய கொடுப்பனவுகள் கூட்.ஊழி.ஆணைக்குழு சுற்று நிருபத்திற்கு அமைய வழங்கப்படும்.

தகைமைகள்:-

அ. கூட்டுறவு ஊழியர் 08 ஆவது சம்பளத் திட்டப் பதவியில் சம்பந்தப்பட்ட துறையில் ஆகக் குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம்./ கூட்டுறவு ஊழியர் 09 ஆவது சம்பளத் திட்டப் பதவியில் சம்பந்தப்பட்ட துறையில் ஆகக் குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம்./

அல்லது

ஆ. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்திரல் சம்பந்தப்பட்ட துறை சார்ந்த பட்டம்/ சம்பந்தப்பட்ட துறைசார்ந்த டிப்ளோமா/ சம்பந்தப்பட்ட துறை சார்ந்த பயிற்சி நெறிச் சான்றிதழ்.

அல்லது

இ. கூட்டுறவு ஊழியர் உயர் தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தியுடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில்/ அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/ கைத் தொழில் நிறுவனம் ஒன்றில் உற்பத்தி/ சந்தைப்படுத்தல்/ பொருள் விநியோகமும் பங்கீடும்/ பொருள் இறக்குமதியும் ஏற்றுமதியும் ஆகிய பிரிவுகளில் ஒன்றில்/ அதற்கு மேற்பட்ட பிரிவுகளில் முகாமை நிலைப் பதவியொன்றில் சம்பந்தப்பட்ட துறையில் ஆகக் குறைந்தது 05 ஆண்டு கால அனுபவம். /
க.பொ.த.உயர் தரப்பத்திரப் பரீட்சையில் கணக்கியல் உட்பட 03 பாடங்களுடனான சித்தியுடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/ கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் உற்பத்தி/ சந்தைப்படுத்தல்/ பொருள் விநியோகமும் பங்கீடும்/ பொருள் இறக்குமதியும் ஏற்றுமதியும் ஆகிய பிரிவுகளில் ஒன்றில்/ அதற்கு மேற்பட்ட பிரிவுகளில் முகாமை நிலைப் பதவியொன்றில் சம்பந்தப்பட்ட துறையில் ஆகக் குறைந்தது 06 ஆண்டு கால அனுபவம்.

### 03. பதவி:- களஞ்சிய முகாமையாளர் வெற்றிடம் :- 02

குறியீட்டு இலக்கம் :- 208/13

சம்பள அளவுத்திட்டம் :- 33360-360X10-370X10-40660, 400320-4320X10-4440X10-487920 (02/2025 சுற்றுநிருபம்), ஏனைய கொடுப்பனவுகள் கூட்.ஊழி.ஆணைக் குழு சுற்றுநிருபத்திற்கு அமைய வழங்கப்படும்.

தகைமைகள்:-

அ. கூட்டுறவு ஊழியர் 14 ஆவது சம்பளத்திட்டப் பதவியில் சம்பந்தப்பட்ட துறையிலான பதவி ஒன்றில் ஆகக் குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம்./ கூட்டுறவு ஊழியர் 15 ஆவது சம்பளத் திட்டப் பதவியில் சம்பந்தப்பட்ட துறையிலான பதவி ஒன்றில் ஆகக் குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம்./

அல்லது

ஆ. கூட்டுறவு ஊழியர் சாதாரண தரப் பத்திரப் பரீட்சையில் சித்தி/க.பொ.த.சாதாரண தரப் பத்திரப் பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாது சிங்களம்/தமிழ் உட்பட 3 திறமைச்சித்தியுடன் கணிதம் உட்பட 6 பாடங்களுடனான சித்தி.

### 04. பதவி:- கணக்கு பதிவாளர் வெற்றிடம் :- 01

குறியீட்டு இலக்கம் :- 215/09

சம்பள அளவுத்திட்டம் :- 35200-450x10-460x10-44300, 422400-5400x10-5520x10-531600 (02/2025 சுற்றுநிருபம்), ஏனைய கொடுப்பனவுகள் கூட்.ஊழி.ஆணைக்குழு சுற்றுநிருபத்திற்கு அமைய வழங்கப்படும்.

தகைமைகள்:-

அ. கூட்டுறவு ஊழியர் 10 ஆவது சம்பளத் திட்டப் பதவியில் கணக்கு பதிவாளர்/ வெளிக்கள உத்தியோகத்தர்/ காசாளர் பதவியொன்றில் ஆகக் குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம்./ கூட்டுறவு ஊழியர் 11 ஆவது சம்பளத் திட்டப் பதவியில் கணக்கு பதிவாளர்/ வெளிக்கள உத்தியோகத்தர்/ எழுதுநர்/ காசாளர் பதவியொன்றில் ஆகக் குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம்./

அல்லது

ஆ. இலங்கைத்தொழில் நுட்பக் கல்லூரியின் கணக்கியலிலான டிப்ளோமா/ இதற்கு சமனான தகைமை/ மாகாண கூட்டுறவுப் பயிற்சி நிறுவனத்தினால்/ தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவனத்தினால் (NICD) நடாத்தப்பட்ட கூட்டுறவு டிப்ளோமா பரீட்சையில் சித்தி.

அல்லது

இ. கூட்டுறவு ஊழியர் உயர் தராதரப்பத்திர பரீட்சையில் சித்தியுடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில்/ அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/ கைத்தொழில் நிறுவனமொன்றில் கணக்கியல் துறைப்பதவியொன்றில் ஆகக் குறைந்தது 03 ஆண்டு கால அனுபவம்/
க.பொ.த. உயர் தரப்பத்திரப் பரீட்சையில் கணக்கியல் உட்பட 03 பாடங்களுடனான சித்தியுடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில்/ அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/ கைத்தொழில் நிறுவனமொன்றில் கணக்கியல் துறைப்பதவியொன்றில் ஆகக் குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம்.

### 05. பதவி:- கிராமிய வங்கி எழுதுநர் வெற்றிடம் :- 01

குறியீட்டு இலக்கம் :- 300/12

சம்பள அளவுத்திட்டம் :- 33820-370X10-385X10-41370, 405840-4440X10-4620X10-496440 (02/2025 சுற்றுநிருபம்), ஏனைய கொடுப்பனவுகள் கூட்.ஊழி.ஆணைக்குழு சுற்றுநிருபத்திற்கு அமைய வழங்கப்படும்.

தகைமைகள்:-

அ. i)கூட்டுறவு ஊழியர் 13 ஆவது சம்பளத் திட்டத்தில் எழுதுநர் பதவியில் 02 வருட அனுபவம் அத்துடன் கணனியை உபயோகித்துப் பணியாற்றும் ஆற்றலை உறுதிப்படுத்தும் அனுபவச்சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்./ கூட்டுறவு ஊழியர் 14 ஆவது சம்பளத் திட்டத்தில் எழுதுநர் பதவியில் 04 வருட அனுபவம் அத்துடன் கணனியை உபயோகித்துப் பணியாற்றும் ஆற்றலை உறுதிப்படுத்தும் அனுபவச்சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்.

அல்லது

ii)கூட்டுறவு ஊழியர் 13 ஆவது சம்பளத்திட்டத்தில் கணனிப்பக்க உருவாக்குநர் பதவியில் 02 வருட அனுபவம்./ கூட்டுறவு ஊழியர் 14 ஆவது சம்பளத்திட்டத்தில் கணனிப்பக்க உருவாக்குநர் பதவியில் 04 வருட அனுபவம்.

அல்லது

ஆ. கூட்டுறவு ஊழியர் உயர்தராதரப்பத்திரப் பரீட்சையில் சித்தி./ க.பொ.த.உயர்தரப் பத்திரப் பரீட்சையில் கணக்கியல் உட்பட 03 பாட சித்தி அத்துடன் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றில் 3 மாதங்களுக்குக் குறையாத MS Office கற்கை நெறி/ அதனை ஒத்த கணனி கற்கை நெறியினைப் பயின்று சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்.
அ) பிரிவு அல்லது ஆ) பிரிவு தகைமைப் பிரிவில் பணிக்கு இணைக்கப்பட்டவர்கள் தமது தகுதிகாண் காலத்தினுள் மாகாண கூட்டுறவு பயிற்சி நிறுவனத்தினால் நடாத்தப்படும் கிராமிய வங்கியியல் கற்கைநெறியொன்றை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்து சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

### 06. பதவி:- சாரதி வெற்றிடம் :- 01

குறியீட்டு இலக்கம் :- 312/13

சம்பள அளவுத்திட்டம் :- 33360-360x10-370x10-40660, 400320-4320x10-4440x10-487920 (02/2025 சுற்றுநிருபம்), ஏனைய கொடுப்பனவுகள் கூட்.ஊழி.ஆணைக்குழு சுற்றுநிருபத்திற்கு அமைய வழங்கப்படும்.

தகைமைகள்:-

அ. 05 ஆம் தரக் கல்விச் சான்றிதழுடன் பேருந்து/ லொறி/ பெட்டியுடன் கூடிய உழவு இயந்திர சாரதி அனுமதிப் பத்திரத்துடன் ஆகக்குறைந்தது 03 ஆண்டு கால அனுபவம்.

### 07. பதவி:- காவலாளி வெற்றிடம் :- 01

குறியீட்டு இலக்கம் :- 315/15

சம்பள அளவுத்திட்டம் :- 32435-345x10-360x10-39485, 389220-4140x10-4320x10-473820 (02/2025 சுற்றுநிருபம்), ஏனைய கொடுப்பனவுகள் கூட்.ஊழி.ஆணைக்குழு சுற்றுநிருபத்திற்கு அமைய வழங்கப்படும்.

தகைமைகள்:-

அ. கூட்டுறவு ஊழியர் 16 ஆவது சம்பளத்திட்டப் பதவியில் ஆகக் குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம்./
கூட்டுறவு ஊழியர் 17 ஆவது சம்பளத்திட்டப் பதவியில் ஆகக் குறைந்தது 01 ஆண்டு கால அனுபவம்.

அல்லது

ஆ. 05 ஆம் தர கல்விச் சான்றிடன் சிறந்த தேகாரோக்கியமும் உடையவராக இருத்தல் வேண்டும்.

### 08. பதவி:- தொழிலாளி வெற்றிடம் :- 01

குறியீட்டு இலக்கம் :- 318/17

சம்பள அளவுத்திட்டம் :- 31515-330x10-345x10-38265, 378180-3960x10-4140x10-459180 (02/2025 சுற்றுநிருபம்), ஏனைய கொடுப்பனவுகள் கூட்.ஊழி.ஆணைக்குழு சுற்றுநிருபத்திற்கு அமைய வழங்கப்படும்.

தகைமைகள்:-

அ. 05 ஆம் தர கல்விச் சான்றிதழுடன் சிறந்த தேகாரோக்கியமும் உடையவராக இருத்தல் வேண்டும்.

விண்ணப்பதாரிகள் விண்ணப்பப் படிவங்களினை சுன்னாகம் மின்சார நிலைய வீதியில் அமைந்துள்ள தலைமைக் காரியாலயத்தில் கிழமை நாட்களில் காலை 9.00 மணிமுதல் மாலை 4.00 மணி வரை பெற்றுக்கொள்ள முடியும். அத்துடன் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப் படிவங்கள் தகைமைச் சான்றிதழ்களின் போட்டோப்பிரதிகளுடன் 23.06.2025 ஆம் திகதிக்கு முன்னர் "தலைவர், சுன்னாகம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், மின்சார நிலைய வீதி, சுன்னாகம்" எனும் முகவரிக்கு பதிவுத்தபாலிலோ அல்லது நேரடியாகவோ ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

தலைவர்,
சுன்னாகம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்,
மின்சார நிலைய வீதி, சுன்னாகம்.

(C-3160)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 16 ஆம் ஆண்டு நினைவலைகள்



அமரர்.

## கந்தையா சாமி

(K.S அம்பாள் மினிபஸ் உரிமையாளர்)

மலர்வு: 01.11.1934 உதிர்வு: 09.06.2009

வாழ்க்கை எவ்வளவு பெரியது
என்பதை எமக்குச் சொல்லித்
தந்து வாழ்வைப் புரிய வைத்தவர்
நீங்கள் என்பதை நாம்
ஒரு நாளும் மறந்ததில்லை
எம்மை ஏணியில் ஏற்றி
அழகு பார்த்தவர் நீங்கள்
நாங்கள் வாழும்வரை
உங்கள் நினைவுகள் அழியாது அப்பா!

# 4 ஆம் ஆண்டு நினைவலைகள்



அமரர்.திருமதி.

## யசோதா திரவியம்

(K.S அம்பாள் மினிபஸ் உரிமையாளர் சாமி
அவர்களின் மகள்)

மலர்வு: 31.05.1966 உதிர்வு: 20.06.2021

நான்காண்டுகள்
கடந்து சென்று விட்டதே
ஏனோ எம் மனங்களின்
காயங்கள் ஆறுவதாய்த்
தெரியவில்லை அக்கா
உங்களை இழந்த நொடி
எம்மையே நாம் இழந்து விட்டோம்

1/5 பலாலி வீதி,
2 ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.


என்றும் உங்கள் நினைவுகளுடன் வாழும்
குடும்பத்தினர்

(4465)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுச் செய்திகள்

## ஓய்வை அறிவித்தார் பியூஷ் சாவ்லா




இந்திய கிரிக்கெட் அணியின் சுழற்பந்து வீச்சாளர் பியூஷ் சாவ்லா அனைத்து கிரிக்கெட் போட்டிகளிலிருந்தும் ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார்.

பியூஷ் சாவ்லா 3 டெஸ்ட் போட்டிகள், 7 டி-20 போட்டிகள் மற்றும் 25 ஒருநாள் போட்டிகளிலும் விளையாடியுள்ளார்.


அதன்படி, 3 டெஸ்ட் போட்டி களில் விளையாடி 7 விக்கெட்டுகளையும், 25 ஒருநாள் போட்டிகளில் விளையாடி 32 விக்கெட்டுகளையும் வீழ்த்தியுள்ளார்.

இந்தியப் ப்ரிமியர் லீக் கிரிக்கெட் தொடரில் 192 போட்டிகளில் விளையாடி 191 விக்கெட்டுக்களை வீழ்த்தியுள்ளார்.

இதன்படி, இந்தியப் ப்ரிமியர் லீக் தொடரில் அதிக விக்கெட்டுகளை வீழ்த்திய வீரர்கள் பட்டியலில் மூன்றாவது இடத்தை பிடித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-3)

## வணங்காமண் மறுவாழ்வு கழகம் நடத்தும் பாரம்பரிய கிளித்தட்டு சுற்றுப்போட்டி





வணங்காமண் மறுவாழ்வு கழகத்தால் நடத்தப்படுகின்ற வணங்காமண் வெற்றிகிண்ண கிளித்தட்டு சுற்றுப்போட்டியின் ஆரம்ப போட்டியானது கடந்த வெள்ளிக்கிழமை கதிரவன் விளையாட்டு மைதானத்தில் ஆரம்பிக்கப்பட்டிருந்தது.

அழிவு நிலையில் உள்ள தமிழர்களது பாரம்பரிய விளையாட்டாக கிளித்தட்டு இருப்பதனால் அதனை கிராம மட்டங்களில் இருந்து மீளுருவாக்கும் நோக்கோடு வடக்கு-கிழக்கு மாகாணங்களிலுள்ள அணிகளை உள்வாங்கி ஆரம்பிக்கப்பட்டு நடத்தப்படுகின்றது.

ஆரம்ப போட்டியில் முல்லைத்தீவு மாவட்டங்களை சேர்ந்த 10 அணிகள் பங்குபற்றியுள்ளன.

அதில் இருந்து மூன்று அணிகள் தெரிவு செய்யப்பட்டு வடக்கு- கிழக்கு மாகாணங்களில் இருந்து அந்தந்த மாவட்டங்களில் குறித்த கிளித்தட்டு போட்டியானது ஒவ்வொரு மாவட்ட ரீதியாகவும் இடம்பெற்று ஒவ்வொரு மாவட்டத்தில் இருந்தும் மூன்று அணி கள் தெரிவு செய்யப்பட்டு போட்டிகள் இடம்பெற்று அதில் தெரிவு செய்யப்படும் அணி கள் இறுதி போட்டிக்கு செல்ல இருக்கின்றது. (நி-3)

## கைது செய்யப்படுவாரா கோலி? பதிவு செய்யப்பட்டது முறைப்பாடு

பெங்களூரில் இடம் பெற்ற வெற்றிக் கொண்டாட்ட விழாவின்போது 11 பேர் உயிரிழந்த சம்பவம் தொடர்பாக கிரிக்கெட் வீரர் விராட் கோலி மீது முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.


ஐ.பி.எல். தொடரின் இறுதிப்போட்டியில் பஞ்சாப் அணியை 6 ஓட்டங்களால் வீழ்த்தி பெங்களூர் அணி வெற்றி பெற்று முதல் முறையாக சம்பியன் பட்டத்தை கைப்பற்றியது.

இதையடுத்து, பெங்களூர் சின்னசாமி அரங்கிற்கு அருகே இடம்பெற்ற வெற்றிக் கொண்டாட்டத்தின்போது ஏற்பட்ட சன நெரிசலில் சிக்கி 11 பேர் உயிரிழந்தனர்.

இதனால் வெற்றி பேரணி சோகத்தில் முடிந்தது. இதுகுறித்து விசாரணை முன்னெடுக்குமாறு பெங்களூர் முதலமைச்சர் சித்தராமையா உத்தர விட்டார்.


உயிரிழந்தோரின் குடும்பத்தினருக்கு இந்திய ரூபா மதிப்பில் 10 லட்சம் இழப்பீடு வழங்கப்படுமென ரோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் அணி நிர்வாகத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், கப்பன் பார்க் காவல் நிலையத்தில் ஏ.எம்.வெங்கடேஷ் என்பவர் பெங்களூர் அணியின் நட்சத்திர வீரர் விராட் கோலிக்கு எதிராக முறைப்பாடளித்துள்ளதுடன் இவ்வாறு கப்பன் பார்க் காவல் நிலையத்தில் மேலும் இரு வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.



ஏற்கனவே இந்த விவகாரத்தில் பெங்களூர் அணியின் சந்தைப்படுத்தல் பிரிவு தலைவர் நிகில் சோசாலே உட்பட நான்கு பேரைகர்நாடக மாநில காவல்துறையினர் கைதுசெய்துள்ளமை குறிப்பிடத்தக்கது (நி-3)

## சர்வதேச செஸ் போட்டியில் 7 ஆவது தடவை கார்ல்சன் சம்பியன்




நோர்வே சர்வதேச "கிளாசிக்" செஸ் போட்டி அந் நாட்டிலுள்ள ஸ்டாவஞ்சர் நகரில் இடம் பெற்றது. இப் போட்டியில் மொத்தமாக 7 வீரர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

ஒவ்வொரு வீரரும். மற்றவர்களுடன் தலா 2 முறை விளையாட வேண்டும். இதில் அதிக புள்ளிகளைப் பெற்று முதல் இடம் பிடிக்கும் வீரர் வெற்றி பெற்றவராவார்.

இந் நிலையில், இறுதிச் சுற்றுப் போட்டியில் கார்ல்சன் சிறப்பாக விளையாடி 7 ஆவது முறையாக பட்டம் வென்றுள்ளார்.

இறுதிச் சுற்று போட்டியில் கார்ல்சனை விட அதிக புள்ளிகளைப் பெற வேண்டும் என்ற நோக்கில் அமெரிக்க வீரர் பாபியானோ கருணாவை எதிர்த்து விளையாடிய குகேஷ் 3 ஆவது இடத்தைப் பெற்றார்.

10 சுற்றுப் போட்டிகளின் முடிவில் 16 புள்ளிகளுடன் கார்ல்சன் முதலிடத்தை பிடித்துள்ளதுடன் பாபியானோ கருணா 15.5 புள்ளிகளுடன் இரண்டாவது இடத்தையும், குகேஷ் 14.5 புள்ளிகளுடன் மூன்றாவது இடத்திலும் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கால்நடை வைத்தியர்கள் இன்று வேலை நிறுத்தம்

(கொழும்பு)

அரசாங்க கால்நடை வைத்தியர்கள் சங்கம் இன்று திங்கட்கிழமை காலை 6 மணி முதல் 24 மணி நேர அடையாள வேலைநிறுத்தத்தை முன்னெடுக்க முடிவு செய்துள்ளது.

கொழும்பில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த சங்கத்தின் தலைவர் வைத்தியர் உப்புல் ரஞ்சித் குமார மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், கால்நடை வைத்தியர்களுக்கான தனியான சேவை யாப்பை தயாரிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வரும் நிலையில், அதனை நாசப்படுத்த விவசாய அமைச்சின் செயலாளர் தொடர்ந்து முயற்சிப்பதால் வேலைநிறுத்தத்தில் ஈடுபட முடிவு செய்துள்ளோம்.

இதன் விளைவாக, அனைத்து அரசாங்க கால்நடை அலுவலகங்களின் பணிகளும் பாதிக்கப்படுவதுடன், மிருகக் காட்சிசாலை திணைக்களம், வனவிலங்கு திணைக்களம், துறைமுகம், விமான நிலையங்களில் உள்ள விலங்கு தனிமைப்படுத்தல் மையங்கள் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களில் உள்ள கால்நடை வைத்தியர்களின் சேவைகளும் பாதிக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (க-8)




## விற்பனைக்குண்டு

வான்கோழி சேவல்கள் விற்பனைக்கு

**1 Kg - 1500/=**

சுழிபுரம்

**077 332 2433**

(1211)



14 ஆம் வருட

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமக

## நினைவலைகள்



மலர்வு 27.06.1983

உதிர்வு 16.05.2011

**அமரர். இரத்தினம் இதயராசா (மாமா)**

திதி: வைகாசி பூர்வபக்க சதுர்த்தசி (09.06.2025)

கணந்தோறும் ஊறும் நினைவுகள்
கணங்கள் நீண்டு நினைவும் வற்றுமோ?
உணர்வு உள்ளவரை நினைவுமிருக்கும்
காணாக் காட்சிதான் இனி நீயெமக்கு

மானாவளவு,
கரணவாய், கரவெட்டி. (4474)

தகவல் : குடும்பத்தினர்




## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 400 | 200 | 250 | 350 | 450 |
| உருளைக்கிழங்கு | 200 | 180 | 180 | 150 | 200 |
| பச்சைமிளகாய் | 500 | 600 | 500 | 700 | 600 |
| தக்காளி | 600 | 600 | 700 | 500 | 800 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 300 | 280 | 250 | 240 |
| கோவா | 500 | 500 | 550 | 350 | 500 |
| கரட் | 800 | 750 | 700 | 700 | 800 |
| பூசணி | 120 | 180 | 160 | 150 | 200 |
| புடோல் | 150 | 200 | 200 | 180 | 300 |
| வாழைக்காய் | 120 | 120 | 150 | 80 | 100 |
| சின்ன வெங்காயம் | 350 | 100-300 | 400 | 400 | 400 |
| பெரிய வெங்காயம் | 120 | 160 | 150 | 115 | 150 |
| பாகற்காய் | 800 | 800 | 600 | 600 | 1000 |
| வெண்டைக்காய் | 200 | 150 | 200 | 120 | 400 |
| கருணைக் கிழங்கு | 300 | 350 | 200 | 200 | 400 |
| பயற்றங்காய் | 300 | 300 | 250 | 350 | 300 |
| லீக்ஸ் | 350 | 450 | 400 | 350 | 500 |
| பீற்றூட் | 600 | 600 | 550 | 400 | 600 |
| கறிமிளகாய் | 800 | 900 | 600 | 600 | 1000 |
| முருங்கைக்காய் | 1500 | 1600 | 1200 | 1200 | 1600 |
| போஞ்சி | 600 | 650 | 600 | 500 | 1000 |
| கத்தரிதம்புள்ள | 350 | 150 | 400 | -- | 400 |
| கீரை - 1 பிடி | 80 | 100-160 | 150 | 100 | 100 |
| தேசிக்காய் | 300 | 250 | 400 | 250 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 180 | 250 | 250 | 100-220 | 160-220 |
| இராசவள்ளி | 600 | 650 | 600 | 500 | 600 |
| வெங்காயப்பூ | 800 | 600 | 600 | 700 | 600 |
| முள்ளங்கி | 250 | 200 | 200 | 150 | 300 |
| பொன்னாங்காணி | 80 | 60 | 100 | 100 | 60 |
| வல்லாரை | 80 | 70 | 80 | 80 | 80 |
| ஈரப்பலா | -- | -- | 100 | -- | -- |

# இராசிபலன்

09.06.2025
வைகாசி 26, திங்கட்கிழமை
திரயோதசி முற்பகல் 10.25 மணிவரை
விசாகம் பிற்பகல் 4.28 மணிவரை

சுபநேரம் 11.52-1.22 மணிவரை
இராகுகாலம் 7.22-8.52 மணிவரை
வைகாசி விசாகம், வற்றாப்பளை கண்ணகியம்மை பொங்கல்

சந்திராஷ்டமம்
ரேவதி, அச்சுவினி

**வளவன்**

**மேஷம்** — கவலைகள் தீர இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள், விரயங்கள் கூடும், பொது வாழ்வில் வீண் பழிகள் ஏற்படாமல் பார்த்துக் கொள்வது நல்லது, உடல்நலனில் கவனம்

**கடகம்** — பிரபலமானவர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள், மற்றவர்கள் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், செயற்பாடுகளில் உற்சாகம் காட்டுவீர்கள்.

**துலாம்** — தொலைபேசி வழியில் அனுகூலம் தரும் செய்திகள் வந்து சேரலாம், புதிய பொறுப்புக்களும் பதவிகளும் வந்து சேரலாம், பெரிய மனிதர்கள் வீடு தேடி வரலாம், வாக்கு மேன்மையுண்டு.

**மகரம்** — பலரது அன்பிற்கும் பாத்திரமாவீர்கள், வியக்கும் செய்திகள் வீடு வந்து சேரலாம், வங்கியில் வைப்பு நிதியை உயர்த்தும் எண்ணம் உருவாகும், சுப செலவுகள் அதிகரிக்கும்.

**ரிஷபம்** — நண்பர்களின் வழியில் சுப செய்திகள் வந்து சேரலாம், கடன் தொல்லைகள் குறையும், சென்ற இடங்களில் செல்வாக்கு மேலோங்கும் நாள், புதிய பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு.

**சிம்மம்** — பெரிய மனிதர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள், சுப செய்திகள் வந்து சேரலாம், வியாபார விருத்திக்கு வித்திடுவீர்கள், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம்.

**விருச்சிகம்** — ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள், பக்குவமாகப் பேசி காரியம் சாதிக்க வேண்டிய நாள், உறவினர் பகை அகலும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**கும்பம்** — நண்பர்கள் உங்களின் முயற்சிக்கும் பக்க பலமாக இருப்பர், வசதி வாய்ப்புக்களை பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், திட்டமிட்ட காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள்.

**மிதுனம்** — வியாபார விருத்தியுண்டு, கனவுப்பலிதமுண்டு, சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காணும் நாள், கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம்

**கன்னி** — எப்படி நடக்குமோ வென நினைத்த காரியம் நல்லவிதமாக அமையும், உயர்வான சிந்தனைகள் மனதில் தோன்றும், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**தனுசு** — தொழில் வளர்ச்சிக்கு அனுபவம் மிக்கவர்களிடம் ஆலோசனை கேட்பீர்கள், வழிபாடு வளர்ச்சியைக் கூட்டும், பயணங்களால் பிரியமான ஒருவரைச் சந்திக்கும் வாய்ப்புண்டு.

**மீனம்** — திறமை மிக்கவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், எதிர்காலம் குறித்து முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள், கடுமையான எதிர்ப்புக்கள் கூட திடீரென சாதகமாகி விடும்.

**நிம்மதியைத் தேடி அலைவதில் பயனில்லை அது உங்கள் நெஞ்சுக்குள்ளே இருக்கிறது.**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

வல்வெட்டி வேவில் வீரகத்தி விக்னேஸ்வர சுவாமி ஆலய விசுவாவசு வருஷ மஹோற்சவத்தில் நாளை செவ்வாய்க்கிழமை கலை 9.30 மணிக்கு தேர்த் திருவிழாவும், மறுநாள் புதன்கிழமை காலை 8.30 மணிக்கு வல்வை ஊரணி சமுத்திரத்தில் தீர்த்தோற் சவமும் அன்று இரவு கொடி யிறக்க உற்சவமும் இடம் பெறவுள்ளதென ஆலய ஆதீன கர்த்தா தெரிவித் துள்ளார். (3-8)

# வாடிக்கு தீ வைப்பு! செம்பியன் பற்றில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

யாழ். வடமராட்சி கிழக்கு செம்பியன்பற்று பகுதியில் மீனவர்கள் மத்தியில் இடம் பெற்ற முறுகலை தொடர்ந்து நேற்று முன்தினம் இரவு கரைவலை வாடி ஒன்றிற்கு விசமிகளால் தீ வைக்கப்பட் டுள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவது.

செம்பியன்பற்று பகுதியில் உழவியந்திரம் பாவித்து கரைவலை தொழில் செய்வது முற்றாக தடை செய்யப்பட் டுள்ளது.

இதனை அடுத்து குறித்த பகுதியில் உழவியந்திரம் பாவித்து கரைவலை தொழில் செய்து வந்தவர்களை அகற்றும் செயற்பாடு களில் அதிகாரிகள் ஈடு பட்டனர்.



இந்த நடவடிக்கை யின் போது மீனவர்க ளுக்கிடையே முறுகல் நிலையும் ஏற்பட்டிருந்ததை தொடர்ந்து, நேற்று முன்தினம் இரவு செம்பியன்பற்று பகுதியில் உள்ள கரைவலை வாடி ஒன்றுக்கு விஷமிகளால் தீ வைக்கப்பட்டுள்ளது.

இதில் இரண்டு லட்சம் பெறுமதியான கடற்றொழில் உபகரணங்கள் முற்றாக நாச மாகியுள்ளதாக பாதிக்கப்பட் டவர்கள் தெரிவிக்கின்றனர். சம்பவம் தொடர்பாக பொலி ஸார் மேலதிக விசாரணை களை மேற்கொண்டு வருகின் றனர். (8)

## நீரில் மூழ்கி நால்வர் பலி

(கொழும்பு)

பாலஎல்ல ஆற்றில் நீரா டச் சென்ற நான்கு பேர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ள தாக பொலிஸார் தெரிவித்த னர்.

இந்நால்வரும் இரத்ம லானை பகுதியைச் சேர்ந்த வர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளதாக பொலி ஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் அரலகங்வில பொலிஸார் மேலதிக விசாரணைகளை நடத்தி வருகின்றனர். (க-8)

## முழுநிலா நாள் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

உரும்பிராய் ஞானவைரவ கோவிலடி சனசமூக நிலையம் நடத்தும் முழுநிலா நாள் கருத்தரங்கு நிகழ்வு நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4.30 மணி முதல் 6 மணிவரை சனசமூக நிலைய மேல் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

சனசமூக நிலையத் தலைவர் இரா.ஜெயக்குமார் தலைமையில் இடம்பெறவுள்ள இந் நிகழ்வில் கருத்துரையினை அரசியல் ஆய்வாளர் நிலாந்தன் வழங்கவுள்ளதுடன் "புதிய கூட்டுக்கள் நம்பிக்கைகளைப் புதுப்பிக்குமா" என்ற கலந்துரையாடலும் இடம்பெறவுள்ளது. (3-8)



யா/ புனித சாள்ஸ் மகா வித்தியாலய மாணவி செல்வி.றொபேட்சன் திலக்சினி வயலின் இசைத்தல் போட்டியில் முதலாம் இடத்தினைப் பெற்றமைக்காக புனித சாள்ஸ் மகா வித்தியாலய பழைய மாணவர் சங்கத்தினரால் அண்மையில் பாராட்டு விழா நிகழ்வு இடம்பெற்றது.



தென்மராட்சி-இடைக்குறிச்சி ஸ்ரீ சுப்பிரமணிய வித்தி யாலயத்தின் தரம் ஒன்று மற்றும் இரண்டு மாண வர்களுடைய சிறுவர் சந்தை நிகழ்வுகள் அண்மையில் பாடசாலை முதல்வர் தி.அபராஜிதன் தலைமையில் பாடசாலை வளாகத்தில் இடம்பெற்றது. (படம: சுபேசன்)



யாழ்ப்பாணம் - ஆனைப்பந்தி ஸ்ரீ சிவகுருநாதர் சுவாமி ஆலய மஹா கும்பாபிஷேக பெருவிழா நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை பக்திபூர்வமாக இடம்பெற்றது. (படம்: சிவசாந்தன்)

## நல்லூர் பிரதேச சபை, கொக்குவில் சபைக்குச் சொந்தமான கடையினை வாடகைக்கு வழங்குவதற்கான கேள்வி கோரல்

சபைக்குச் சொந்தமான கீழ்க்குறிப்பிடப்படும் அட்டவணையில் விவரிக்கப்பட்ட கடையினை வாடகைக்கு குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்வி கீழ் உள்ள நிபந்தனைகளுக்கு அமைவாக நல்லூர் பிரதேச சபையால் கோரப்படுகின்றது.

கேள்விப் பத்திரம் வழங்கும் திகதி :-09.06.2025 ஆம் திகதி தொடக்கம் 23.06.2025 திகதி மு.ப10.00 மணிவரை

கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளும் திகதி :- 24.06.2025 ஆம் திகதி மு.ப 11.00 மணிவரை

கேள்விப்பத்திரம் திறக்கப்படும் திகதி :- 24.06.2025 ஆம் திகதி மு.ப 11.00 மணிக்கு

கேள்விப்பத்திரம் திறக்கப்படும் இடம் :- கலந்துரையாடல் மண்டபம். தலைமை அலுவலகம். நல்லூர் பிரதேச சபை.

**வாடகை**

| தொ. இல | கடை விபரம் | மாதாந்த வாடகை | ஆகக் குறைந்த கேள்வித் தொகை (VAT,NBT நீங்கலாக) | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப்பணம் (VAT,NBT நீங்கலாக) | மீளளிக்கப்படாத கேள்விப்படிவக் கட்டணம் (VAT,NBT நீங்கலாக) |
|---|---|---|---|---|---|
| 01 | திருநெல்வேலி சந்தை கட்டடத்தொகுதியில் அமைந்துள்ள கடை இல-32 (ஆடியபாதம் வீதி) | 10,000.00 | 2,400,000.00 | 50,000.00 | 2,000.00 |

1. கேள்விப்பத்திரங்கள் இரண்டு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு. மூலப்பிரதியுட்பட மற்றைய பிரதியையும் செயலாளர். நல்லூர் பிரதேச சபை. 14/5.கருவப்புலம் வீதி. கொக்குவில் கிழக்கு. கொக்குவில் என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக இடப்பட்டு. பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும் அல்லது இதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடுதல் வேண்டும்.
2. கேள்விப்பத்திரங்கள் மீளளிக்கப்படாத படிவக்கட்டணமும். மீளளிக்கப்படக்கூடிய வைப்புப்பணமும் செலுத்திப் பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். கேள்விப்பத்திரங்களை பெறுபவர்கள் கோரிக்கைக் கடிதத்தினையும். தமது அடையாள அட்டையையும். கிராம அலுவலரினால் வழங்கப்படும் வதிவிடச் சான்றிதழையும் கொண்டு வருதல் வேண்டும்.
3. எந்தவொரு கேள்வியையும் ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ கேள்விச்சபைக்கு பூரண அதிகாரம் உண்டு.
4. ஏற்றுக்கொள்ளக் கூடிய குறைந்த கேள்வித் தொகையிலும் குறைவான கேள்வி கோருபவர்களின் கேள்வி வைப்புப்பணம் மீளளிக்கப்பட மாட்டாது.
5. கேள்விப்படிவத்தினைப் பெற்றபோதும் உரிய காலத்தினுள் படிவத்தினை பூரணப்படுத்தி சமர்ப்பிக்காதவிடத்து தங்களால் செலுத்தப்படும் கேள்வி வைப்புப்பணம் எக்காரணம் கொண்டும் மீளளிக்கப்படமாட்டாது.
6. தங்களால் செலுத்தப்படும் கேள்வித்தொகை எக்காரணம் கொண்டும் தங்களிற்கு மீளளிக்கப்பட மாட்டாது.
7. கேள்வி திறக்கப்படும் சந்தர்ப்பத்தில் கேள்விதாரரோ அல்லது அவரது பிரதிநிதியோ சமூகமளிக்க லாம்.
8. ஏற்றுக்கொள்ளப்படும் சித்திகரக் கேள்விதாரா தமது கேள்வித் தொகையினை கேள்வி திறக்கப்பட்டதிலிருந்து **ஒரு வார காலத்தினுள்** ஒரே தடவையில் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் ஒன்றினை செய்து கொள்ள வேண்டும். தங்களால் செலுத்தப்படும் கேள்வித்தொகை எக்காரணம் கொண்டும் தங்களிற்கு மீளளிக்கப்படமாட்டாது.
9. வாடகை ஒப்பந்தம் கைச்சாத்திட்ட பின்னர் விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் மதிப்பிடப்படும் கடைக்கான மாதாந்த வாடகையையும் மற்றும் அரசாங்கத்தினால் விதிக்கப்படும் ஏனைய வரியும் பணமாக மாதாந்தம் செலுத்துதல் வேண்டும்.
10. மாதாந்த வாடகைப்பணத்தினை அடுத்தமாதம் 10 ஆம் திகதிக்கு முன்னராக செலுத்தல் வேண்டும் தவறின் கட்டுப்பணத்தின் 10% தண்டப்பணம் மேலதிகமாகச் செலுத்துதல் வேண்டும். தொடர்ந்து இரு மாதங்களுக்கு வாடகை செலுத்தத் தவறுவோரது ஒப்பந்தம் முன் அறிவித்தலின்றி இரத்துச் செய்யப்படும்.
11. முற்குறிப்பிட்ட 7.8 ஆவது நிபந்தனையின் பிரகாரம் நடக்கத் தவறுமிடத்து வாடகை ஒப்பந்தம் இரத்துச் செய்யப்பட்டுச் செலுத்தப்பட்ட பணத்தொகைகள் மீளளிப்புச்செய்யப்பட மாட்டாது என்பதுடன். அவர்களது பெயர் தவறுனர் பட்டியலில் அட்டவணைப்படுத்தப்படும்.
12. தங்களால் நடத்த உத்தேசிக்கப்படும் வியாபாரத்தின் தன்மை சபையால் பரிசீலிக்கப்பட்ட பின்னரே அனுமதி வழங்கப்படும்.
13. சபையால் தீர்மானிக்கப்படும் வியாபார உரிமக் கட்டணத்தினை வருடாந்தம் செலுத்தி வியாபார உரிமச் சான்றிதழினைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.
14. சித்திகர வாடகை உடன்படிக்கையாளர் நல்லூர் பிரதேச சபையுடன் செய்து கொள்ளும் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்படும் நிபந்தனைகளுக்கு இணங்க நடந்து கொள்ள வேண்டும்.
15. கேள்வி தொடர்பான மேலதிக விபரங்களை தலைமை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

**செயலாளர்,**
**நல்லூர் பிரதேச சபை.**
**09.06.2025**

(சி-3155)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெண்மைக்கு ஆசைப்பட்டு சருமத்தை அழிக்காதீர்

(கொழும்பு)

சருமத்தை வெண்மையாக்கும் கிரீம் உள்ளிட்ட மேலும் பல கிரீம்களின் காலாவதி திகதி மாற்றியமைக்கப்பட்டு சமூக ஊடகங்களின் வாயிலாக விற்பனை செய்யப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறு காலாவதியான கிரீம் வகைகளை விற்பனை செய்து வந்த கொழும்பு - ராஜகிரிய பகுதியில் அமைந்துள்ள இரண்டு கடைகளை பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை அடையாளம் கண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த விற்பனை நிலையங்கள் வெளிநாட்டில் தயாரிக்கப்படும் கிரீம் வகைகளின் காலாவதி திகதியை மாற்றி அதனை சமூக ஊடகங்கள் ஊடாக விற்பனை செய்து வந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த இரு கடைகளிலும் இருந்த அனைத்து கிரீம் வகைகளையும் பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை அதிகாரிகள் கைப்பற்றியுள்ளதாகவும், இது தொடர்பில் மேலதிக விசாரணைகளை அதிகாரிகள் மேற்கொண்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

அண்மைக்காலமாக முகத்தை வெண்மையாக்கும் கிரீம் உட்பட பலவகை கிரீம் வகைகள் சமூக வலைத்தளத்தினூடாக விற்பனை செய்யப்படுவது அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்க விடயமாகும். (க-8)

# ஜனாதிபதி அநுர ஜேர்மன் பயணம்



(கொழும்பு)

மூன்று நாள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க நாளை மறுதினம் புதன்கிழமை ஜேர்மனிக்கு செல்ல உள்ளார்.

குறித்த விஜயத்தில் வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் உள்ளிட்ட அரச அதிகாரிகள் பங்கேற்கவுள்ளனர்.

மேலும் இக்குழு ஜேர்மன் ஜனாதிபதி பிராங்க்-வால்டர் ஸ்டெய்ன்மியர் உட்பட அந்நாட்டின் முக்கிய அரச தலைவர்கள் மற்றும் ஜேர்மன் வாழ் இலங்கை சமூகத்தினரை சந்தித்து கலந்துரையாடல்களில் ஈடுபட உள்ளது.

பயங்கரவாதத் தடைச்சட்டம் மற்றும் மனித உரிமைகள் பாதுகாப்பு உட்பட பொறுப்புக்கூறல் விடயங்களில் ஜேர்மனியும் ஏனைய மேற்குலக நாடுகளும் இலங்கைக்கு அழுத்தங்களை பிரயோகித்து வருகின்ற நிலையில் ஜனாதிபதி அநுரவின் ஜேர்மன் விஜயம் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-8)

# டெங்கு-சிக்குன்குனியா தடுக்க விசேட நடவடிக்கை

(கொழும்பு)

பாடசாலைகளில் டெங்கு மற்றும் சிக்குன்குனியா நோய்களைத் தடுப்பதற்கு எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் கல்வி அமைச்சு சிறப்பு வழிகாட்டல் ஒன்றை வெளியிட்டுள்ளது.

விசேட ஆய்வுகளின் போது பாடசாலை வளாகத்தில் நுளம்புகள் பெருகும் இடங்கள் கண்டறியப்பட்டால், அந்தப் பாடசாலையின் அதிபருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படலாம் என அந்த வழிகாட்டல் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதன்படி, அனைத்து பாடசாலை வளாகங்களையும் நுளம்புகள் பெருகாதவாறு பராமரிக்க, பாடசாலைகளின் கல்வி நடவடிக்கைகளுக்கு இடையூறு ஏற்படாத வகையில் உகந்த உள் செயற்திட்டமொன்றை உருவாக்கி செயற்படுத்துவதற்கு இதன்மூலம் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. (க-8)


## கண்ணீர் அஞ்சலி

மலர்வு-25.08.1950
உதிர்வு-08.06.2025

எமது கல்லூரியின் பொருளியல் பாட ஆசிரியர் திரு.ஜெ.தயாபரன் அவர்களின் அன்புத் தாயார்

அமரர்.
**ஜெயரட்ணம் நவமணி**

அவர்கள் இறைபதமடைந்த செய்தி கேட்டு துயரடைவதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.



(சி-3150)

ஆசிரியர் நலன்புரிக்கழகம்
யா/உரும்பிராய் இந்துக் கல்லூரி.

## துயர் பகிர்கின்றோம்

எமது மன்ற உறுப்பினரும் சக மருத்துவருமான Dr திருமதி. S. துளசி அவர்களின் அன்புத் தந்தை

அமரர்.
**இராசேந்திரம் சிறிராசா**

அவர்கள் இறைபதம் அடைந்தமையிட்டு அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிராா்த்திக்கிறோம்



வடமாகாண ஆயுள்வேத மருத்துவர் நலன்புரி மன்றம்
(1212)


# INVITATION FOR BIDS (IFB)

1. Bidding will be conducted through **National Competitive Bidding Procedure (NCB).**
2. Interested bidders may obtain further information from **address given below in 6** and inspect the Procurement documents at the same place on any working days from **2025.06.09 until 2025.06.23 from 09:00 hrs to 15:00 hrs.**
3. Qualification requirements are indicated in Section 4 of the Procurement document. Additional details are provided in Schedule (Section 5) for SBD 3 Documents.
4. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered with the Construction Industry Development Authority (CIDA) in the field of road construction/Building construction for grade mentioned in the table below.
   **" Bidders shall also register themselves with the Registrar of Public Contracts Sri Lanka, in terms of the public Contract Act No 03. of 1987 for the contracts exceed Rs.5 million,"**
5. A complete set of Procurement Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to **the Secretary, Valikamam West Pradeshiya Sabha, Chulipuraam (T.P No: 021 225 0144, Fax No: 021 225 0144) during the period from 2025.06.09 until 2025.06.23 from 09:00 hrs to 15:00 hrs. upon payment of a non-refundable fee as mentioned in the table.** The method of payment will be by cash
6. Bids (Original & Duplicate) shall be delivered or sent by registered post to the **Chairman, Procurement Committee, Valikamam West Pradeshiya Sabha, Chulipuraam at or before 10.00 hrs, 2025.06.24** Bid number must be written on the left-hand upper corner of the envelope. Late Bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the bidders' representatives who choose to attend.
7. Pre-Bid Conference will be held at **Head office, Valikamam West Pradeshiya Sabha, Chulipuraam** commencing at **10.00 am on 2025.06.16**
8. Bids shall be accompanied by a Bid security as per the information given in the Tables.

| | | Document Issuing/Purchasing Period | | | From 2025.06.09 until 2025.06.23 | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | Pre-Bid Conference | | | At 10.00 A.M on 2025.06.16 | | | | |
| | | Closing and Opening of Bids | | | At 10.00A.M on 2025.06.24 | | | | |
| S No | Description of Work | Estimated Cost (Rs.) In Million (without VAT) | Contract Period (Days) | Grade Required | Non-Refundable Fee | Validity Period days | Bid Validity Date | Required Bid Security: Bid Security Amount | Required Bid Security: Bid Security Validity Date |
| 01 | Reconstruction of Kallaivempady Road NP/14/41(17)/2/PSDG/01/2025 | 6.584 | 84 Days | C8& Above Roads ( Culvert & Retaining wall) | 3000.00 | 77 days | 09.09.2025 | 66,000.00 | 07.10.2025 |

**Chairman,**
**Procurement Committee**
**Valikamam West Pradeshiya Sabha,**
**Chulipuram**
**2025.06.09**

(சி-3154)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
திலலையம்பதியா

# சீர்மேவு யாழ்ப்பாணம் கோண்டாவில் ஈழத்து தில்
# 50 ஆவது ஆண்டு வசந்த வைக
# இரதோற்சவ சிறப்பு மலர்-09.

## திருக்கோயில் வரலாறு

அன்று சிவபூமி என்று திருமூலர் அழைத்த மணிநாடாம் இலங்கை மண்ணின் யாழ்.மாவட் டத்தில் சைவப் பெருமக்கள் வாழும் நல்லூர் பிரதேசத்தில் கோயில்கள் அதிகமாக உள்ள இடமாக வும் நீர்வளம், நிலவளம், தானியங்களும், பயிர்களும் சிறப்புற விளைகின்ற இடமாகவும் ஈழத்துத் தில்லை யம்பதி திகழ்கின்றது. இத்தகைய தில்லையம்பதியில் இற்றைக்கு 158 ஆண்டுகளுக்கு முன்னர் தோற்றம் பெற்ற பேச்சியம்மன் என அழைக்கப்பட்ட கோயில் ஆரம்பத்தில் வேலன் என்ற அன்பரால் மாமர நிழலில் வெள்ளைக் கல்லை வைத்து ஓலையால் வேயப்பட்டு சிறு கொட்டிலமைத்து சாணகத்தால் மெழுகி தண்ட வாள இரும்பின் மணியோசையுடனும் பிரதி செவ் வாய், வெள்ளி தோறும் திருவிளக்கு ஏற்றி வைத்து வழிபாடு செய்யப்பட்டு வந்தது. காலத்தின் பயனாக இவருடைய சிந்தனையின் நிமிர்த்தம் பேச்சி அம்மன் என்று திருவுருவத்தினை கருங் கல்லால் அமைத்து நான்கு பக்கமும் சுண்ணாம்புக் கற்களால் கட்டப்பட்டு கூரை தட்டினால் வேயப்பட்டு 15 அடி விஸ்தீரணம் கொண்ட மடாலயம் அமைத்து அம்பாள் பிரதிஸ்டை செய்யப்பட்டது.

அம்பாளின் அபிஷேகத்திற்கு தேவையான நீரானது சின்னவன் சரவணை என்ற அடியவரின் வீட்டுக் கிணற்றிலிருந்து எடுக்கப்பட்டு அபிஷேகம் செய்து வந்தன. மேலும் அடியவர்களினால் கொடுக்கப் படுகின்ற பிடி அரிசியினை காணிக்கையாகக் கொண்டு வெள்ளை அரிசிச் சாதம் தினந்தோறும் இரவு வேளையில் அம்பாளுக்கு நைவேத்தியமாக படைக்கப் பட்டது. 1910 ஆம் ஆண்டு இக் கோயிலுக்கு குதிரை வாகனம் ஒன்று செய்யப்பட்டது. மேலும் கோண் டாவில் கிழக்கைச் சேர்ந்த சைவ ஆசாரத்தைப் பேணும் சபாபதி மார்க்கண்டேயர் அவர்கள் பூசைக் காக நியமிக்கப்பட்டார்.

இவர் காலத்திலேயே ஸ்ரீ ஞான வைரவர் ஆல யத்தில் நடைபெறுகின்ற மானம்பூ திருவிழா வில் வாழைவெட்டுப் பூசைக்காக அம்பாள் கட்டுச் சுவாமி யாக இரவு வேளையில் எழுந்தருளுவதை காண அடியார்கள் கூட்டம் அலைமோதும். வைகாசி விசாகத்தை முன்னிட்டு முதற் சனிக் கிழமையில் அடியவர்கள் தங்கள் வீடுகள் தோறும் தயாரிக்கப்ப டுகின்ற பலகார வகைகளை கடகங்க ளிலே வைத்து வெள்ளைத் துணியால் கட்டி கோயிலை நோக்கி தலையில் சுமந்து வந்து பாய் விரித்து அதன் மேல் வாழையிலையில் பொங்கலிட்டு ஆட்டுக்கடாய், கோழி போன்ற உயிரினங்களையும் பலிகொடுத்து நடைபெறுகின்ற இவ் விழா வானது இக் கிராமத்தில் அடியார்களினால் சிறப்பு விழாவாகக் கொண்டாடப் பட்டது. 1939 ஆம் ஆண்டு முருகன் என்ற அன்பரால் சந்தணக் கிண்ணமும் கைமணியும் சேமக்கலை யமும். பஞ்சமணியும் 1947 ஆம் ஆண்டு கதிரன் என்ற அன்பரால் தண்டவாளத் தூணுடன் தகரத் தால் ஆன கூரையிட்ட காண்டாமணியும் உபயம் செய்யப் பட்டது.

1959 ஆம் ஆண்டு ஆரம்பப் பகுதியில் ஆலய தர்மகர்த்தா வீரகத்தி தம்பிஐயா, முத்தன் இராசன், பொன்னன் சுந்தர லிங்கம் ஆகியோரின் பெரும் மனதினால் தர்மபரிபாலன சபை உருவாக்கப்பட்டு இச் சபையால் இவ் ஆலயம் பொறுப் பேற்கப்பட்டு காலையும், மாலையும் நித்தியபூசை வழிபாடு களை வீரகத்தி தம்பிஐயா அவர்கள் செய்து வந்தார். இவரின் பெரும் முயற்சியினால் ஆலயத்தில் நடைபெற்று வந்த பலியிடுதல், மடைபோடுதல் போன்ற முறை மைகள் மாற்றப்பட்டு ஆலயப் புறசூழலில் இருந்த சூளை மேடுகள் அகற்றப்பட்டு ஆலயத்திற்கென ஒரு விஸ்தீரணம் கொண்ட இடம் ஒதுக்கப் பட்டது.

1962ஆம் ஆண்டு அன்னையின் அருட் கடாட்சத்தினால் ஒன்று கூடிய மக்கள் ஆலயத்தைச் சிறப்பான திருப்பெரும் கோயி லாக அமைப்பதற்கு பாலஸ்தாபனம் செய்த னர். முன்னாள் யாழ். மாவட்ட நீதிபதி சே.தன பாலசிங்கம் அவர்களும், யாழ்.பொலிஸ் சுப்பிறிண்டர் திரு.வான்சன்டண் அவர்களும் வடமாகாண அரசாங்க அதிபர் திரு. ஜவன் சமர வீக்கிரம அவர்களும் அஸ்திவாரக் கல் நாட்டு விழாவை முன்னின்று செய்தனர். தொடர்ந்து அடியவர்களினால் இக் கோயில் ஈசான மூலையில் சிரமதானப் பணியில் தீர்த்தக் கிணறு அமைக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து ஆலயத்தில் சிறந்த திருப்பணி வேலைகள் வெகு சிறப்பாகவும் மும்மர மாகவும் நடைபெற்றது. 1965 ஆம் ஆண்டு ஆனி மாதம் 17ஆம் திகதி வியாழக் கிழமை உத்தரட்டாதி நட்சத்திரத்தில் காலை 07.30 மணிக்கு கன்னி லக்கின சுபமுகூர்த்த சுபவேளையில் அம்பாளிற்கு பிரம்மாஸ்ரீ குமார சாமி குருக்கள் அவர்களால் பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகம் நடைபெற்றது. அன்றிலிருந்து பேச்சி அம்மன் என்னும் திரு நாமத்துடன் அடியவர்களுக்கு அருள்புரிந்த அன்னை பராசக்தி பிரம்மஸ்ரீ குமாரசாமிக் குருக்கள் மற்றும் சிற்பாச் சாரியார் ராமகிருஸ்ணா ஆச்சாரியார் அவர்களின் ஆலோசனைகளின் படி அன்னைக்கு "சிவகாமி அம்பாள்" எனும் திருநாமம் சூட்டப்பட்டது.

1966ஆம் ஆண்டு அம்பாளிற்கு வைகாசி விசாகத்தை முன்னிட்டு 10 தினங்கள் அலங்கார உற்சவம் நடைபெற திருவருள் பாலித்தது. அலங் கார உற்சவத்தின் பத்தாவது நாள் பெரு வீதியான அரசடிவீதி ஊடான குமரகோட்ட வீதியால் அம்பாள் வீதி உலா வருவது வழக்கம்.

09.07.1971ஆம் ஆண்டு உத்தரட்டாதி நட்சத்தி ரத்தில் தேர்த்திருப்பணி அங்குரார்ப்பண நிகழ்வு நடைபெற்றது. இதனைத் தொடர்ந்து ரிஷ பம், பலிபீடம், கொடித்தம்பம், வசந்த மண்டபம், மணிக்கோபுரம், வைரவர், திருமஞ்சனக்கிணறு முதலான திருப்பணி வேலைகள் நிறைவேற்றப் பட்டு 1976ஆம் ஆண்டு (நள வருடம் வைகாசித் திங்கள்) 6 ஆம் மாதம் 3ஆம் திகதி வியாழக் கிழமை 1 ஆவது மஹோற்சவ பெருவிழா ஆரம்ப மானது தேர் வெள்ளோட்டமும் இடம்பெற்றது. (09.06.1976 புதன்கிழமை பி.ப 4.30 மணிய ளவில்) மஹோற்சவ காலத்தில் வேட்டைத்திரு விழாவன்று மாலை வேளையில் குதிரைவாக னத்தில் அம்பாள் ஞான வைரவர் சுவாமி கோயி லுக்குச் சென்று வேட்டை யாடுவதும் இரவு சப்பறத் திருவிழாவும் மறுநாள் தேர்த்திருவிழாவும் வைகாசிப் பௌர்ணமியில் தீர்த்த உற்சவமும் நடைபெறுவது வழக்கம்.

1977 இல் அம்பாள் திருவூஞ்சல் காப்பு சுட்டிபுரத் தில் இசைமணி சீர்காழி கோவிந்தராஜன் அவர்களால் பாடப்பட்ட சிறப்பு உடையது.

திருக்கோயிலில் வாயிலில் தல விருட்சமாக காணப்படும் ஆலும், அரசும் ஒன்றிணைந்த அருள்மிகு பொந்தின் ஊடாக அம்பாளின் விமா னத்தில் கலசத்தைக் காணக்கூடியதாக உள்ளது. இது அற்புதமான ஒன்றாகும்.

அம்பாளின் மூர்த்திகரம் மேலும் பிரவாகிக்க 1982இல் மீண்டும் பாலஸ்தாபனம் செய்யப்பட்டு உலக இந்து மகாசபை (விஸ்வ இந்து பரிஷித்) இலங்கை இணை பிரதித் தல்லைவராக இருந்த திரு.யோகேந்திரா துரைச்சாமி அவர்களால் அழைத்து வரப்பட்ட வட இந்திய துறவியும் அரச அதிபரும் சேர்ந்து தைப்பூச தினத்தன்று அடிக்கல் நாட்டப்பட்டு திருப்பணி வேலைகள் தொடங்கப் பட்டன. இந்தியாவிலிருந்து வருவிக்கப்பட்ட சிறந்த சிற்பாசிரியர்களால் இரட்டைப் பஞ்சாங்க முறைப்படி கலை அம்சம் பொருந்திய தூபிதள விமான கோபுரம் அமைக்கப்பட்டது. ஈழத்தாயான சிவகாமி அம்பாள் திருவுருவத்தை நிர்மாணித்த தென்னிந்திய சிற்ப வல்லுனர் திரு.பெரியசாமி ஆச்சாரியாருக்கு அம்பாளின் விக்கிரக வேலையே கடைசி வேலையாக அமைந்தது. இத்தோடு அவர் இறைவனடி சேர்ந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

மூலமூர்த்தியான சிவகாமி அம்பாள் வள்ளி தெய்வானை சமேத ஸ்ரீ முருகப்பெருமான், ஸ்ரீ வயி ரவப் பெருமான் என்பன இந்தியாவிலிருந்து 02.10.87 விஜயதசமி அன்று இங்கு வந்து சேர்ந் தன. விநாயகப் பெருமான், வள்ளி தெய் வானை ஸ்ரீ முருகப்பெருமான், நாகதம்பிரான், சந்தான கோபாலர், நர்த்தன கணபதி, மகேஸ்வரி, வைஷ்ணவி, பிரமாகி, துர்க்கை, சண்டேஸ்வரி ஆகிய பரிவார மூர்த்திகளுக்கு ஆகம முறைப்படி தனித்தனி கோயில்களும், சிவகாமி அம்பாள், சமேத ஸ்ரீ நடராஜப்பெருமானிற்கு கனக சபையும் அமைக்கப்பட்டதுடன் மூலமூர்த்தியான சிவகாமி அம்பாளின் விக்கிரகமும் புதிதாக பிரதி ஷ்டை செய்யப்பட்டு பரிபாலனசபை தலைவர் அ.சோம சுந்தரம், செயலாளர் த.தேவராசா, பொரு ளாளர் பொ.சிவானந்தம் ஆகியோரின் தலைமையில் 1989 ஆம் ஆண்டு சிவஸ்ரீ க.குகதாஸக்குருக்கள் அவர்களினால் பங்குனி உத்தர பௌர்ணமி நிறை நாளில் மஹாகும்பாபிஷேகத்தை நடாத்தி வைத்தார்.

காஞ்சிப் பெரியாரின் அருள் ஆசியுடனும் ஈழத்து அருளாளர்களின் நல்லாசியுடனும் இந்தியாவில் புனித கங்கை தீர்த்தம் இம் மஹாகும்பாபிஷே கத்திற்குப் பயன்படுத்தப்பட்டது ஒரு சிறப்பாகும். இந்த நன்னாளில் அம்பாளின் திருக்கோயில் சுற்றாடலிற்கு தென்னிந்தியாவைச் சேர்ந்த பெரியசாமி ஆச்சாரியின் நல்லாசிகளுடன் தில்லையம்பதி எனும் திருநாமம் சூட்டப்பட்டது. தினமும் காலை, மதியம், மாலை பூசை, வழிபாடு நடைபெறவும் அம்பாளின் அருட்கடாச்சம் கிட்டியது. 1990 ஆம் ஆண்டு திருக்கோயில் வருடாந்த சங்காபிஷேக தினத்தன்று காசியில் இருந்து காசி விஸ்வநாதர் (லிங்கம்) இங்கு வரவழைக்கப்பட்டது.

1992 பங்குனி உத்திரத்தை முன்னிட்டு பத்துத் தினங்கள் இலட்ச அர்ச்சனை ஆரம்பமாகியது. பங்குனி உத்தர சங்காபிஷேகம், மஹோற்சவ வேட்டைத் திருவிழா.நவராத்திரி, விஜயதசமி, மானம்பூ ஆகிய தினங்க ளில் அம்பாள் பழைய தெரு வீதியுலா தரிசனம் தருவது வழக்கமாகும். 1993 ஆம் ஆண்டு தை மாதம் காசி விசாலாட்சி சமேத விஸ்வநாதருக்கு பிரதிஷ்டா கும்பாபிஷேகம் நடைபெற்றது.1994ஆம் ஆண்டு நடை பெற்ற பங்குனி உத்தர சங்காபிஷேகத்தின் போது அம்பா ளின் அருட்கடாட்சத்தினாலும் அடியார்களின் பெரும் காணிக்கையினாலும் அம்பாளுக்கு பொன்முடி யும் திருக்கோரணம் சூட்டுவிழாவும் கொண்டாடப்பட்டது.

கவிமாமணி ந.வீரமணி ஐயர் அவர்களால் எழுதப்பட்டு தென்னிந்திய பக்திப்பாடகர் கலை மாமணி ரி.எம். சௌந்தரராஜன் அவர்களால் பாடப்பட்ட திருவூஞ்சல் ஒலிப்பதிவு நாடா வெளியிடப் பட்டு விழா மா.இலக்கண குமார் தலைமையில் 20.05.1994 வைகாசி வசந்த உற்சவத்தன்று ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் ஆசியுடன் வெளியிடப்பட்டது. 10.06.1997 இல் மா.இலக்கணகுமார் தலைமையில் இரண்டாவது பக் திப் பாமாலை ஒலிப்பதிவு நாடாவும் வெளியிடப் பட்டது.

இந்தியாவிலிருந்து கொண்டுவரப்பட்ட ஸ்ரீ சக்கரம் 10.09.1998 பங்கு உத்தர தினத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டது. 08.05.2000 ஆம் ஆண்டு 25 ஆவது கொடி யேற்றத்தை முன்னிட்டு அடியார்களின் பெரும் காணிக்கையினால் அம்பாளுக்கு தங்கக்குடை சூட்டு விழாவும் இராஜகோபுரம் அமைப்பதற்கான அங்கு ரார்ப்பண வைபவமும் நடைபெற்றன.

2001 ஆம் ஆண்டில் அம்பாளுக்கு சுற்றுப்புற மண்டப வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு 2002 ஆம் ஆண்டு நிறைவு பெற்றது. 25.05.2002 பிரம்மஸ்ரீ ந.வீரமணிஐயர் அவர்களால் இயற்றப்பட்டு கலை மாமணி டாக்கர் சீர்காழி G.சிவசிதம்பரம் மற்றும் T.MS செல்வகுமார் ஆகி யோரால் பாடப்பெற்று ஒலிநாடா வெளியிடப்பட்டது.

மீண்டும் 19.06.2003 இ
பட்டு திருப்பணி வேலைக
விநாயகர், வள்ளி, தெய்வ
விஸ்வநாதர் விசாலாட்சி புன
தோடு நவக்கிரகமும் புதி
அம்பாளுக்கு செங்களனி தடா
அத்துடன் வசந்த மண்டப தெ
இந்தியாவின் கும்பகோணத்
நடராஜப்பெருமான், மாண
செய்யப்பட்டதுடன் தமிழகத்
கன்னிகை எனப் போற்
தீர்த்தங்கள் கொண்டு சுபானு
22 ஆம் நாள் (04.04.20
பங்குனி உத்தர நன்னாள்
குருக்கள் அவர்கள் மஹாகு
வைத்தார். அருட்கவி செம்ப
ஐயர், இரா.இராஜேஸ் வரன்
தென்னிந்தியப் பாடகர்களா
கலைமாமணி டாக்டர் சீர்
ஆகியோரால் பாடப்பெற்
கும்பாபிஷேக கீர்த்தனை பா
பரிபாலனசபை தலைவர் திரு
தலைமையில் நடைபெற்றது

13.07.2005 ஆம் ஆ
உத்தர தினத்தன்று பஞ்ச
திற்கான அடிக்கல்லை போ
அவர்கள் நாட்டி வைத்தார்.

அன்னையின் அளப்பரி
களை உள்ளடக்கிய ராஜகோ
தென்னிந்திய சிற்பவல்லுந
ல்லபுரம் ஸ்தபதி ஞானமுரு
ஸ்தபதி புருஷோத்தமன் கு
பணிகள் ஆரம்பிக்கப்பட்டன
தோற்றத்திற்கு தமிழகத்தில்
மதுரையில் இருந்து கலசமு
காண்டா மணியும் மாமல்ல
லகர்களும் கொண்டு வர
வேலைகள் தொடர்ந்து
வெளிநாடுகளில் இருக்கும்
ளினாலும் எங்கள் கிராமத்
நிதியினாலும் அவர்களின்
ணிக்கப்பட்ட இராஜகோபு
பூர்த்தியடைந்த நிலையி
18.03.2010 இல் இராஜ
தலைவர் திரு.மா.குணசிங்
கோபுர கும்பாபிஷேகம் சிவா
அவர்களினால் நடாத்தி வை
மஹாவித்துவான் ந.வீரம
வரன் சி.கணேசலிங்கம்.கு.
இயற்றப்பட்டு தென்னிந்திய
ராஜ், முகேஷ், ஸ்ரீநிவாஸ்.
கிருஷ்ணராஜ், உமாரமன
பெற்ற "கோபுர தரிசனம்..."
ஐந்து இறுவெட்டு வெளியி
வருட மஹோற்சவம் 12
அம்பிகையின் திருவருள்

"திருப்பணிச் செல்வர்"
னரால் தில்லையம்பதி ஸ்ரீசி
மண்டபத்துக்கு 16.07.20
சக்திபிரியன் அவர்களால்
இந்தியாவில் இருந்து புதிதா
சக்ர யந்திரம் 18.03.201
திருவாதிரை நட்சத்திரத்
கரக்குருக்கள் தலைமையில்
செய்யப்பட்டது.

12.04.2013 இல் பொது
அமைய நவகோண வடிவி
அமைப்பதற்கு தேர் திருப்ப
டது. திருமண மண்டப
பூர்த்தியடைந்த நிலையில்
கோயில் பரிபாலன சபைத்
ராதா அவர்களின் த


அனுசரணை
**தேர்த் திருவிழா உபயகாரர்**

மலராக்கம்– ந.கிஷோக்குமா
**திருக்கோயில் பரிபாலன சபை, தில்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
ம்பதியாள் துணை

# தில்லையம்பதி ஸ்ரீசிவகாமி அம்பாள் திருக்கோயில் வைகாசி மஹோற்சவப் பெருவிழா 09.06.2025



ம் 19.06.2003 இல் பாலஸ்தாபனம் செய்யப் ப்பணி வேலைகள் ஆரம்பிக்கப் பட்டன. . வள்ளி, தெய்வானை சமேத முருகன். ர் விசாலாட்சி புனருத்தாரணம் செய்யப்பட்ட பக்கிரகமும் புதிதாக அமைக்கப் பெற்று கு செங்களனி தடாகமும் அமைக்கப் பெற்றது. வசந்த மண்டப தெற்குவாயில் திறக்கப் பெற்று ன் கும்பகோணத்திலிருந்து தருவிக்கப்பட்ட பருமான். மாணிக்கவாசகர் பிரதிஷ்டை டதுடன் தமிழகத்தின் கும்ப கோண நவ க எனப் போற்றப்படும் மகா மாசிமக ா கொண்டு சுபானு வருடம் பங்குனி மாதம் நாள் (04.04.2004) ஞாயிற்றுக் கிழமை உத்தர நன்னாளில் சதா மகாலிங்க சிவ அவர்கள் மஹாகும்பாபிஷேகத்தை நடாத்தி அருட்கவி செம்மல் பிரம்மஸ்ரீ ந.வீரமணி இராஜேஸ் வரன் ஆகியோரால் இயற்றப்பட்டு தியப் பாடகர்களான T.M.S. செல்வகுமார். ணி டாக்டர் சீர்காழி G.சிவ சிதம்பரம் ரால் பாடப்பெற்ற தில்லையம்பதியாள் ஷக கீர்த்தனை பாகம் 04 வெளியீட்டு விழா பை தலைவர் திரு. சுப்பையா முத்துலிங்கம் யில் நடைபெற்றது.

2005 ஆம் ஆண்டு புதன்கிழமை ஆனி னத்தன்று பஞ்ச தள வானுயர் கோபுரத் அடிக்கல்லை போசகர் காத்தி பொன்னையா நாட்டி வைத்தார்.

னயின் அளப்பரிய அருளினால் பஞ்சதளங் ளடக்கிய ராஜகோபுர திருப்பணி வேலைகள் திய சிற்பவல்லுநர்கள் தமிழகத்தின் மாம ்தபதி ஞானமுருகன் குழுவினரும், சீர்காழி ருஷோத்தமன் குழுவினரால் கட்டுமாணப் ஆரம்பிக்கப்பட்டன. கோபுரத்தின் எழில்மிகு ற்கு தமிழகத்தில் வரலாற்றுச் சிறப்பு மிக்க ் இருந்து கலசமும் தஞ்சாவூரில் இருந்து ணியும் மாமல்லபுரத்தில் இருந்து துவாரபா ் கொண்டு வரப்பட்டது. இத் திருப்பணி ் தொடர்ந்து மேற்கொள்ளப்பட் டதோடு களில் இருக்கும் அன்னையின் அடியவர்க எங்கள் கிராமத்து அடியவர்களின் பெரும் லும் அவர்களின் உழைப்பினாலும் நிர்மா ட்ட இராஜகோபுர திருப்பணிகள் யாவும் டைந்த நிலையில் மஹாகும்பாபிஷேகம் 10 இல் இராஜகோபுர திருப்பணி சபைத் திரு.மா.குணசிங்கம் தலைமையில் இராஜ பாபிஷேகம் சிவாஸ்ரீ சுந்தரேஸ்வரக் குருக்கள் ரால் நடாத்தி வைக்கப்பட்டுள்ளது. அத்துடன் துவான் ந.வீரமணிஐயர். இரா.இராஜேஸ் ணேசலிங்கம்.கு.உதயரூபன் ஆகியோரால் டு தென்னிந்தியக் கலைஞர்கள் வீரமணி கஷ். ஸ்ரீநிவாஸ்.சித்ரா. தீபன் சக்கரவர்த்தி. ராஜ். உமாரமணன் ஆகியோரால் பாடப் புர தரிசனம்..." எனும் கீர்த்தனைகள் பாகம் வெட்டு வெளியிடப்பட்டது. அத்துடன் இவ் ஹாற்சவம் 12 தினங்களாக நடைபெற ின் திருவருள் கைகூடியுள்ளது.

ணிச் செல்வர்" முத்தன் ராசன் குடும்பத்தி லையம்பதி ஸ்ரீசிவகாமி அம்பாள் திருமண துக்கு 16.07.2011 ஆம் ஆண்டு பேரன் ன் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டது. ல் இருந்து புதிதாகக் கொண்டு வரப்பட்ட ஸ்ரீ ிரம் 18.03.2012 ஆம் ஆண்டு பங்குனி ரை நட்சத்திரத்தில் பிரம்ம ஸ்ரீ நா.திவா ள் தலைமையில் பிரதிஸ்ட கும்பாபிஷேகம் டது.

2013 இல் பொதுச்சபையின் தீர்மானத்திற்கு வகோண வடிவிலான புதிய சித்திரத்தேர் ற்கு தேர் திருப்பணி சபை தெரிவு செய்யப்பட் மண மண்டப திருப்பணி வேலைகள் டந்த நிலையில் 29.04.2013 இல் திருக் ரிபாலன சபைத் தலைவர் திரு.தம்பிஐயா வர்களின் தலைமையில் பிரபாகரன் ஜெகதீஸ்வரி தம்பதிகள். பிள்ளைகள் சக்திபிரியன். விஷ்கரன் ஆகியோரால் ஸ்ரீ சிவகாமி அம்பாள் திருக்கோயில் திருமண மண்டபம் மங்களகரமாக திறந்து வைக்கப்பட்டது.

2013 ஆம் ஆண்டு முப்பத்து எட்டாவது மஹோற்சவ பெருவிழாவின் போது அட்ஷயதிதி கூடிய சுப நன்நாளில் மூலமூர்த்தியான ஸ்ரீ சிவகாமி அம்பாளுக்கு பொன்முடி சூட்டப்பட்டது. 19.05.2013 இல் புதிய திருக் கைலாச வாகன வெள்ளோட்டவிழா 7 ஆம் திருவிழா தினத்தன்று இரவு நடைபெற்று அத்தினத்திலேயே கைலாச வாகனத்தில் அம்பாள் வரும் காட்சி இடம்பெற்றது. 2014 ஆம் ஆண்டு பங்குனி உத்தர தினத்தன்று நவகோண சித்திர தேருக்கான திருப்பணி வேலைகள் ஆரம்பிக்கப் பட்டது.

02.02.2015 தைப்பூச தினத்தன்று நவகோண புதிய சித்திரத் தேருக்கான அச்சு வைத்தல் நிகழ்வு இடம்பெற்றது. 16.09.2015 ஆம் ஆண்டு பாலஸ் தாபனம் செய்யப்பட்டு திருப்பணி வேலைகள் நடைபெற்று தலைவர் திரு. சி. ஆனந்தராசா தலைமையில் (மன்மத வருஷம்) பங்குனி உத்தர நன்நாளில் பிரம்மஸ்ரீ நா.திவாகரக்குருக்கள் அவர்களினால் கும்பாபிஷேகம் நடாத்தி வைக்கப் பட்டது.

03/02/2015அன்று தென்னிந்திய கலைஞர்களான புவனேஸ்வரி பத்ம நாதன் மற்றும் ற.பிறேமசீலன். த.பரம சாமி ஆகியோர்களால் இயற்றப்பட்டு தென்னிந்திய பாடகர்களான ஜெயசிறி ஜெகன். உன்னிகிருஷ்ணன் .T.M.S, செல்வகுமார் ஆகியோர்களால் பாடப்பட்ட K.பத்மநாதன் என்பவரின் இசையமைப் பிலும் சபாபதி சங்கரப்பிள்ளை குடும்பத் தினரின் அனுசரணையுடன் தில்லையம்பதியாளை போற்றி 6 ஆவது இறு வெட்டு பரிபாலன சபைத் தலைவர் தம்பிஜயாராதா தலைமையில் வெளி யிடப்பட்டது.

2016 வைகாசி மஹோற்சவ தீர்த்த உற்சவ தினத்தன்று புதிய நவகோண சித்திரத் தேருக்கான பவளக்கால் நாட்டும் வைபவம் இடம்பெற்றது. தேர்த் திருப்பணி வேலைகள் மும்மரமாக நிறைவுற்று ஏவிளம்பி வருஷம் 05.06.2017 ஆம் ஆண்டு மஹோற்சவத்தின் 8 ஆம் நாளன்று மாலை தேர் திருப்பணி சபைத் தலைவர் திரு.க.கிருபாகரன் தலைமையில் வெள்ளோட்ட விழா நடைபெற்று தமிழ் நாட்டிலிருந்து வருகை தந்த பூஜண்ட நாகநாத சித்தர் சுவாமிகள் (அதிஷ்டானம்) அவர்கள் கலந்து கொண்டு ஆசியுரை வழங்கி சிறப்பித்தார்.

(42 ஆவது ஆண்டு மஹோற்சவம்) 2017 வசந்த வைகாசி மஹோற்சவத் தின் 11 ஆம் நாள் (08.06.2017) வியாழக் கிழமை முற்பகல் 10.00 மணிக்கு புதிய நவகோண சித்திரத் தேரில் ஆரோகணித்து பவனிவரும் அருட்திருக் காட்சிகளை கண்டுகழிப்புற்றனர்.

1. **20/03/2019** பங்குனி உத்தர இலட்ச அர்ச்சனை பூர்த்தி தினத்தன்று உரும்பிராய் மேற்கு அன்னுங்கை ஸ்ரீ ஞானவைரவர் ஆலயத்திலிருந்து பால் குடப்பவனி ஆரம்பிக் கப்பட்டது.
2. **25/10/2020** விஜயதசமி தினத்தன்று சிறிய எழுந்தருளி அம்பாளுக்கு பொன்முடி திருக்கோரணம்.கையங்கி சூட்டும் விழா நடை பெற்றது.
3. **24/05/2024**/ தேர்த்திருவிழா தினத் தன்று புதிய திருமஞ்சத்திற்கான அங்குரார்ப்பணம் நிகழ்வு இடம்பெற்றது.
4. **29/05/2025** அன்று 50ஆவது வசந்தவைகாசி மஹோற் சவ பெருவிழாவை முன்னிட்டு கோண்டாவில் ஸ்ரீ ஞானவைரவர் ஆலயத்திலிருந்து கொடிச் சீலையானது சம்பிரதாய முறைப்படி முதன் முதலாக சிறிய ரதத்தில் எடுத்துவரப்பட்டது.
5. **03/06/2025** அன்று சுப்பையா முத்துலிங்கம் குடும்பத்தினரின் நிதிப் பங்களிப்புடன் திருநெல்வேலி அர்த்தநாரீஸ்வரர் சிற்பாலய சிற்பாச்சாரியார் விஸ்வ பிரம்ம ஸ்ரீ பத்மநாதன் சுரேந்திரன் அவர்களினால் புதிய திருமஞ்சம் வடிவமைக்கப்பட்டு வெள்ளோட்டம் இடம் பெற்று அத்தோடு திருமஞ்சத்தை வடிவமைத்த சிற்பாச்சாரியருக்கு சிற்பகலா சிம்மம் என்னும் பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டது. இரவு அம்மாள் அழகிய திருமஞ்சத்தில் வீதி உலாவரும் அருங்காட்சியும் இடம்பெற்றது.

**"தில்லையம்பதியாளே சிவகாம சுந்தரியே சரணம்"**

## திருக்கோயில் பிரதம குருவின் ஆசிச் செய்தி



மாதேவி நீயானாய் மகேஸ்வரனின் துணையானாய் கோண்டாவிலில் உருவானாய் கோபுர வடிவனாய் ஈழத்து தில்லையம்பதி புண்ணிய புராதன பிரசித்தி ஷேத்திரத்தில் அமர்ந்திருந்து வேண்டு வோர்க்கு வேண்டிய அருளை அள்ளி வழங்கி கொண்டிருக்கின்ற அருட் பெருஞ்சோதி தனிப் பெருங்கருணையாக விளங்குகின்ற அன்னை மகாசக்தி ஸ்ரீ சிவகாமி அம்பிகையின் விசுவாவசு வருட மகோற்சவ பெருவிழாவின் இரதோற்சவ விழா அன்று எம்பெருமாட்டி நவகோண இரத்தில் பவனி வந்து பக்தர்களுக்கு அருள்பாலிக்கின்ற அத் திரு நாளில் அடியவர்கள் வடம் பிடித்து அன்னை அருள் பெற்று மண்ணில் நல்ல வண்ணம் வாழ வாரீர் ! வாரீர்.சர்வே ஜனஹா சுகினோ பவந்து.

**சிவப்பிரம்மஸ்ரீ வைத்தீஸ்வர சுஜேந்திர சிவாச்சாரியார் (தில்லையம்பதி)**

## தலைவரின் ஆசிச் செய்தி



அகிலாண்ட கோடி பிரமாண்ட நாயகி ஈழத்து தில்லையம்பதியாள் இன்று தேரில் ஆரோகணிக்கும் இத் திருநாளில் அம்பாளின் அருள் எம் அனைவருக்கும் கிடைக்க அவரின் திருத்தாள் பணிந்து வேண்டுகின்றோம்.

அம்பாளின் ரதோற்சவ வடம் பிடிப்போம்.எம் பிணி தீர்ப்போம். இன் நன்னாளில் அனைவருக்கும் அன்னையின் அருளும் ஆரோக்கியமும் கிடைக்க வேண்டுகின்றேன்.

**சி.ஆனந்தராஜா, தலைவர்,**
**தில்லையம்பதி பரிபாலனசபை.**





**ஆக்கம் -அருட்கவி செம்மல் பிரம்மஸ்ரீ ந.வீரமணி ஐயர்**
**பாடியவர்-கலைமாமணி ரி.எம்.சௌந்தரராஜன்**
**இராகம் -கமாஸ்**
**தாளம்- ஆதி**

ஊர்கூடி வடம்பிடித்தே உளம் உருகச் -சித்திரத்
தேர் ஏறி வலம் வந்தாள் தேவி சிவகாமி
(ஊர்கூடி)
அனுபல்லவி
வாரகி வைஷ்ணவி வளம் திகழ் கோண்டாவில்
சீர்மேவு தில்லைப்பதி சிவகாமசுந்தரி (ஊர்கூடி)
சரணம்
தேரின் திருத் தொங்கல் வாகுமாலை சூட
நாதஸ்வர கானம் தவில் ஒலிக்க
பேரின்ப பக்தர் வழிபெருக்கிக் கண்ணீர் சொரிய
ஊரின் புறக்கோண்டாவில் உல்லாறி பவனி வந்தாள்
(ஊர் கூடி)
புன்னகை புரிந்தாருள் பொலிவுறத் தந்தனன்
அன்னவள் வரதமும் அபயமும் காட்டினாள்
என்னகுறை எமக்கு எங்கள் தாய் இருக்கும் போது
இன்னமுத்தத் தாயன்பால் என்றும் எமைக் காத்திடுவாள்
(ஊர் கூடி)

**ாக்குமார், செயலாளர்**
**பை, தில்லையம்பதி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்தியாவிலிருந்து இலங்கைக்கு
# கஞ்சா கடத்திய கள்வர் ஐவர் கைது

(யாழ்ப்பாணம்)

சட்டவிரோதமான முறையில் கடல் வழியாக இலங்கைக்கு கடத்துவதற்காக இராமேஸ்வரம் மீன்பிடி துறைமுகம் அருகே உள்ள கடற்கரையில் கடந்த சனிக்கிழமை காரில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த 10 லட்சம் இந்திய மதிப்பிலான 50 கிலோ கஞ்சா மற்றும் கடத்தலுக்குப் பயன்படுத்திய கார் உள்ளிட்டவற்றை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

இராமேஸ்வரம் மீன்பிடித் துறைமுகக் கடற்கரைப் பகுதியில் இருந்து இலங்கைக்குப் படகில் கஞ்சா கடத்தி செல்ல இருப்பதாக கிடைத்த தகவலையடுத்து குறித்த இடத்திற்கு விரைந்த பொலிஸார், மீன்பிடித் துறைமுகம் அருகே சந்தேகத்திற்கிடமான காரில் இருந்து ஒருவர் பெரிய பை ஒன்றை எடுத்து நாட்டுப் படகில் ஏற்றுவதற்காக கொண்டு சென்றதையடுத்து பொலிஸார் அந்த நபரை மடக்கிப் பிடித்த போது காரில் மேலும் இருவர் இருந்தது தெரிய வந்தது. காரை சோதனை செய்த போது காரில் கஞ்சா மூடைகள் இருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது.

இதையடுத்து கஞ்சா மூடைகள், கடத்தலுக்கு பயன்படுத்திய கார் மற்றும் காரில் இருந்த மூவரையும் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அண்மைக் காலமாக இந்தியாவிலிருந்து கஞ்சா, ஐஸ் போதை, பீடி இலைகள் போன்ற போதைப் பொருட்கள் இலங்கைக்கு கடத்துவது அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-8)

# சீமெந்தின் விலை அதிகரிப்பு

(கொழும்பு)

50 கிலோ கிராம் சீமெந்து மூடை யின் விலையை அதிகரிக்கச் சீமெந்து நிறுவனங்கள் முடிவு செய்துள்ளன.

நேற்று முன்தினம் சனிக்கிழமை முதல் இந்த விலை உயர்வு அமுலுக்கு வந்துள்ளது எனத் தெரிய வருகிறது.

அதன்படி, 50 கிலோ சீமெந்து மூடை ஒன்றின் மொத்த விலை 100 ரூபாயினால் அதிகரிக்கப்படும் என்று சீமெந்து நிறுன வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

50 கிலோ கிராம் சீமெந்து மூடையின் மொத்த விலை அதிகரிக்கப்பட்டாலும், சில்லறை விலையில் எந்தத் திருத்தமும் செய்யப்படவில்லை என்று சீமெந்து நிறுவனங்கள் தெரிவிக்கின்றன.

சீமெந்து உற்பத்திச் செலவுகள் அதிகரித்ததே சீமெந்து விலை உயர்வுக்கு வழிவகுத்ததாக தெரிவிக்கப்படுகிறது. (க-8)

# சந்திப்பதற்கு சந்தர்ப்பமளியுங்கள்
## காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள்

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் வோல்கர் டேக்ர் இம் மாதம் நாட்டுக்கு வருகை தருவதற்கு உத்தேசித்திருக்கும் நிலையில் அவ்வாறு வருகை தரும் பட்சத்தில் முள்ளிவாய்க்காலுக்கு விஜயம் மேற்கொள்ளுமாறும் தங்களை நேரில் சந்தித்துக் கலந்துரையாடுவதற்குச் சந்தர்ப்பம் அளிக்குமாறும் கோரி வடகிழக்கு வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவுகளின் சங்கம் ஐ.நா மனித உரிமைகள் உயர்ஸ்தானிகரிடம் கடிதம் மூலம் கோரியுள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் வோல்கர் டேர்க் எதிர்வரும் 23 ஆம் திகதி நாட்டுக்கு வருகைதரவிருக்கும் நிலையில் குறித்த கடிதம் அனுப்பப்பட்டுள்ளது

இக் கடிதத்தில், வட கிழக்கு மாகாணங்களிலுள்ள வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் குடும்பத்தினராகிய நாம் நீதிகோரி சுமார் 3000 நாட்களுக்கும் மேலாகத் தொடர் போராட்டத்தினை முன்னெடுத்துவருகின்றோம்.

இப்போராட்டம், யுத்தத்தின்போதும் அதன் பின்னரும் அரச படையினரால் அழைத்துச்செல்லப்பட்ட எமது அன்புக்குரியவர்களுக்கு என்ன நேர்ந்தது என்பதை அறிந்துகொள்ளும் நோக்கில் உண்மையையும்அதற்குரிய பொறுப்புக்கூறலையும் கோருகின்ற எமது இயலாமையின் வெளிப்பாடாகும்.

பல ஆண்டுகளாக இப்போராட்டத்தில் ஈடுபட்ட சுமார் 300 பேர் அதற்குரிய பதிலோ அல்லது நீதியோ கிட்டாமல் உயிரிழந்துவிட்டனர். ஆனால் எமது வயோதிபம் மற்றும் உணர்வு ரீதியான சோர்வுக்கு மத்தியிலும் நாம் நீதியைக் கோரி அமைதியான முறையில் போராடி வருகின்றோம்.

இவ்வாறான நிலையில் உங்களது இலங்கை விஜயத்தின்போது உங்களைச் சந்திப்பதற்கு இடமளிக்குமாறு கோருகின்றோம். நாம் ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் 59 ஆவது கூட்டத்தொடரில் கலந்துகொள்வதைத் தவிர்த்து, நாட்டில் இருப்பதன் ஊடாக உங்களை நேரடியாகச் சந்தித்துப் பேச முடியும் எனக் கருதுகின்றோம். அவ்வாறானதொரு சந்திப்பு நாங்கள் முகங்கொடுத்துவரும் யதார்த்த சூழ் நிலையையும் எமது வலிகளையும் உங்களுக்கு எடுத்துரைப்பதற்கு வாய்ப்பளிக்கும் என எதிர்பார்க்கின்றோம்.

அதேபோன்று சுமார் ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்டோர் கொல்லப் பட்டிருக்கக் கூடும் என நம்பப்படும் இறுதி யுத்தம் இடம்பெற்ற முள்ளிவாய்க்காலுக்கு விஜயம் மேற்கொள்ளுமாறும் உங்களிடம் கேட்டுக்கொள்கின்றோம் என அக் கடிதத்தில் மேலும் கூறப்பட்டுள்ளது.(க-8)

# இலங்கை இந்திய உறவு
## அசைக்க முடியாத அர்ப்பணிப்பு
## சந்தோஷ் ஜா சுட்டிக்காட்டு

(கொழும்பு)

அசைக்க முடியாத அர்ப்பணிப்புடன் இலங்கையை இந்தியா ஆதரிக்கின்றது என்று இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற மாநாடொன்றில் பங்கேற்று உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் அங்குமேலும் தெரிவிக்கையில்,

எதிர்காலத்தில் கொழும்பு பங்குச் சந்தையில் முதலீடு செய்ய மேலும் பல இந்திய நிறுவனங்களை ஊக்குவிக்க நாம் எதிர்பார்க்கின்றோம்.

இது இந்தியாவிற்கும், இலங்கைக்கும் இடையிலான பொருளாதார உறவுகளை வலுப்படுத்தும் ஒரு படியாகும் அத்துடன் இது ஒத்துழைப்பை மேம்படுத்தவும் உதவும்.

இலங்கையின் பொருளாதாரம் மீண்டும் உறுதியான நிலைகளை அடையும் போது, அதனூடாக அதிக இந்திய முதலீடுகளை ஈர்க்க முடியும்.

முதலில் இங்கு எழும் வாய்ப்புகளைப் பயன்படுத்தி, இந்திய முதலீடுகளை அதிகரிப்பது சந்தை நம்பிக்கையை வளர்க்கும் ஆற்றலையும் உருவாக்கும்.

அந்த ஸ்திரத்தன்மை ஒரு பிரகாசமான மற்றும் ஒன்றோடொன்று பிணைக்கப்பட்ட நிதியியல் சூழலை உருவாக்கும். அசைக்க முடியாத அர்ப்பணிப்புடன் இந்தியா, இலங்கையை ஆதரிக்கிறது என அவர் சுட்டிக்காட்டினார். (க-8)


# நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அமுதசுரபி அன்னதான சபை

பதிவு இல-S236 (வரைவுள்ளது) ஆரம்பம்-1960


**அமுதசுரபி அம்பிகை**
"அமலனுக்கு அமுதளித்த ஆதிநாயகி அன்பர்களுக்கு உணவளிக்கும் அன்னபூரணி"

## விசேட அறிவித்தல்

நயினாதீவு அருள்மிகு ஸ்ரீ நாகபூஷணி அம்பாளின் திருவருளினால் 1960 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பெற்ற நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அமுத சுரபி அன்னதான சபை "அமுதசுரபி" என்னும் பெயர் தாங்கிய மணிமண்டபத்தின் கண்ணே ஆண்டு தோறும் பல்லாயிரக்கணக்கான அடியார்களுக்குச் சிறந்த முறையில் அன்னதானத் தொண்டினைச் செய்து வருகின்றது. இவ்வாண்டுடன் 66 ஆவது ஆண்டில் பிரவேசிக்கின்றோம்.

அம்பாளின் திருப்பதியிலே நடைபெறும் இத் தொண்டு சிறந்த சேவையெனக் கருதி தருமசீலர்களாகிய வர்த்தகப் பெருமக்கள், விவசாயப் பெருமக்கள், தொழிலாளப் பெருமக்கள் மற்றும் அம்பிகை அடியார்கள், அன்பர்கள் அனைவரும் மனமுவந்து பணம், பொருள், உதவி செய்து வருவதுடன் ஆக்கமும் ஊக்கமும் தந்து அன்னதான சபையின் சேவையைப் பாராட்டியும் வருகின்றனர்.

அம்பாளின் திருவருளால் பணிக்கப்பெற்ற இச்சேவையைச் சிறந்த முறையில் செய்து அல்லும் பகலும் அயராது உழைக்கின்ற சபை நிர்வாகிகளுக்கும், உறுப்பினர்களுக்கும், நற்சேவைத் தொண்டர்களுக்கும், அமுதசுரபி மண்டபத்துக்கு வந்து பணி செய்யும் அடியார்களுக்கும், தத்தம் கடமைகளைத் திறமையாகச் செய்த, செய்கின்ற சேவையாளர்களுக்கும், அன்னதான தொண்டினை நேரடியாகக் கண்டும், கேட்டும் ஆசியுரை வழங்கிய அன்பர்களுக்கும், எல்லாவற்றுக்கும் மேலாக ஆண்டாண்டு தோறும் அன்னதானம் சிறப்பாக நடைபெறப் பணம், பொருள் முதலியவற்றை மனமுவந்து உதவி வரும் தருமசீலர்களுக்கும் எல்லாம் வல்ல ஸ்ரீ நாகபூஷணி அம்பாளின் திருவருள் கிடைக்கும் வண்ணம் பிரார்த்தித்துச் சபையினரின் மனமுவர்ந்த பணிவார்ந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

## திருவிழா விபரம் 2025

| | | | |
|---|---|---|---|
| 26.06.2025 | ஆனி 12 | வியாழன் | கொடியேற்றம் |
| 05.07.2025 | ஆனி 21 | சனி | மஞ்சத் திருவிழா |
| 06.07.2025 | ஆனி 22 | ஞாயிறு | தண்டிகைத் திருவிழா |
| 08.07.2025 | ஆனி 24 | செவ்வாய் | சப்பறத்திருவிழா |
| 09.07.2025 | ஆனி 25 | புதன் | தேர்த்திருவிழா |
| 10.07.2025 | ஆனி 26 | வியாழன் | தீர்த்தத்திருவிழா |
| 11.07.2025 | ஆனி 27 | வெள்ளி | பூங்காவனத் திருவிழா |

நடைபெற இருப்பதால் அம்பாளைத் தரிசிக்கவரும் அடியார்களுக்குச் சிறந்த முறையில் பதினாறு (16) நாட்களும் இரவும், பகலும் அன்னதானம் வழங்கச் சபை தீர்மானம் செய்துள்ளது. ஆகவே தருமசீலர்களாகிய தங்களிடம் அன்னதான சபையால் நியமிக்கப்பட்ட தொண்டர்கள் வருவார்கள். அவர்களிடம் வழமைபோல் நீங்கள் உதவும் பணம், பொருள் முதலியவற்றைக் கொடுத்துச் சபையின் பற்றுச் சீட்டைப் பெற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

நேரடியாகப் பணம், பொருள் கொடுக்க விரும்பும் அடியார்கள் யாழ்.மார்க்கட் சிவகுமார் வெற்றிலைக் கடையிலும் திருநெல்வேலி மார்க்கட் தேனு களஞ்சியத்திலும் கொடுத்து அதற்குரிய பற்றுச்சீட்டுக்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

நேரடியாகப் பணம் கொடுக்க விரும்புவோர்
AMUTHASURBHI COMMERCIAL BANK
கணக்கு இல: 12479850001 Peoples Bank கட்டடம், Pettah
என்னும் விலாசத்திற்கு இலங்கை வங்கி Kayts
A/C NO: 7687836 என்னும் விலாசத்துக்கும் அனுப்புமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம்

(சி-3128)

த.சிவானந்தன் - தலைவர்
ஸ்ரீ துர்க்கா என்ரபிறைசஸ்
133.5 ஆம் குறுக்குத்தெரு,
கொழும்பு -11.
தொலைபேசி -2384757

இரா.கடம்பன்
செயலாளர் 2 ஆம்
வட்டாரம், நயினாதீவு
தொலைபேசி:-
021 431 2149

குமாரசாமி ஸ்ரீ காந்தராசா-
பொருளாளர். "மக்மிலன்"
புத்தகசாலை, 195, ஒல்கொட்
மாவத்தை, கொழும்பு -11.
தொலைபேசி: 244 9565


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனியார் காணியில் இருந்து துப்பாக்கிகள் மீட்பு



(வவுனியா)

வவுனியா, இறம்பைக்குளம் பகுதியில் அமைந்துள்ள தனியார் காணியில் இருந்து பழுதடைந்த நிலையில் காணப்பட்ட இரு துப்பாக்கிகள் மற்றும் ரவைகள் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன.

நேற்றுக் காலை குறித்த காணியில் அதன் உரிமையாளர்களால் அபிவிருத்தி பணிகளை செய்வதற்காக ஜேசிபி இயந்திரம் மூலம் அகழப்பட்டுள்ளது.

இதன்போது மண்ணில் புதையுண்ட நிலையில் காணப்பட்ட இரண்டு ரி-56 ரக துப்பாக் கிகள் மற்றும் அதற்கு பயன்படும் 450 ரவைகள் தென்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பாக வவுனியா பொலிஸாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. சம்பவ இடத்திற்கு சென்ற பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளதுடன் ஆயுதங்களை அகற்றும் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இதேவேளை, குறித்த பகுதியில் 1985 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இந்திய இராணுவத்தின் முகாம் ஒன்று இயங்கியதுடன், அதற்கு அண்மித்த பகுதியில் யுத்த காலத்தில் புளொட் இயக்கத்தின் முகாம் அமைந்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (8-250)

# முல்லை வட்டுவாகல் பாலம் நிர்மாணப் பணிகள் விரைவில்

## அமைச்சர் பிமல் தெரிவிப்பு

(கொழும்பு)

முல்லைத்தீவு, வட்டுவாகல் பாலத்துக்குரிய நிர்மாணப் பணிகள் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் ஆரம்பமாகவுள்ளது என அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நடைபெற்ற விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இந்த தகவலை வெளியிட்டார். நந்திக்கடல், வட்டுவாகல் பாலத் தின் மாதிரித் திட்டம் இறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் நிர்மாணப் பணிகளை ஆரம்பிப்பதற்கு



எதிர் பார்க்கின்றோம் என அவர் குறிப்பிட்டார்.

முல்லைத்தீவு, வட்டுவாகல் பாலம் நிர்மாணிப்பதற்கு 2025 வரவு செலவுத்திட்டத்தில் ஆயிரம் மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (8)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

# கறுப்பு எள்



டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

Botanical Name- sesamum indicum
Family - Pedaliaceae

கறுப்பு எள் விதைகள் பல நூற்றாண்டுகளாக பாரம்பரிய மருத்துவம் மற்றும் சமையல்களில் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இதில் ஊட்டச்சத்துக்கள் நிறைந்துள்ளளன.

ஊட்டச்சத்தின் பொக்கிஷமாக கறுப்பு எள் திகழ்கிறது. இதில்கல்சியம் , இரும்பு , மக்னீசியம், பொஸ்பரஸ் மற்றும் துத்தநாகம் போன்ற அத்தியாவசிய ஊட்டச்சத்துக்கள் இவ் கறுப்பு எள்ளில் நிறைந்துள்ளன. இதில் அனைத்துமே எமது ஆரோக்கியத்திற்கு நல்லது. மேலும் இதில் ஆரோக்கியமான கொழுப்புகள் மற்றும் உயர்தர புரதங்களைக் கொண்டுள்ளது. இந்தக் கறுப்பு எள் விதை செசமின் மற்றும் செசாமால் லிட்டர் அக்ஸிஜனேற்றங்களின் வளமான முலம் என்று கருதப்படுகிறது. இந்தக் கறுப்பு எள் விதைகளை வழக்கமாகச் சாப்பிடுவது இதய ஆரோக்கியத்தை மேம்படுத்த பெரிதும் உதவுகிறது . இவற்றில் உள்ள செசமின் நம்முடலில் கொலஸ்ரோல் அளவைக் குறைத்து இதய நோய்கள் ஏற்படும் அபாயத்தைக் குறைக்கும். இதனால் மாரடைப்பு பக்கவாதம் போன்ற இதய நோய்கள் ஏற்படுவதைத் தடுக்க முடியும்.

நம் உடலுக்குத் தேவையான நார்ச்சத்துக்கான சிறந்த ஒரு உணவுப் பொருள் இந்தக் கறுப்பு எள் . இது நம் உடல் ஆரோக்கியத்தை மேம்படுத்தி செரிமானத்தை பெரிதும் ஊக்குவிக்க உதவும். இதனால் சீரான குடல் இயக்கம் மேம்படும். இதனைத் தொடர்ந்து மலச்சிக்கல் போன்ற வயிற்றுக் கோளாறு பிரச்சினைகளை சரி செய்யவும் இந்தக் கறுப்பு எள் விதைகள் பெரிதும் உதவுகின்றன. ஆரோக்கியமான செரிமான அமைப்பு , ஊட்டச்சத்து, உறிஞ்சுதல் போன்ற ஆரோக்கியத்துக்கு உதவுகிறது. இதில் நிறைந்துள்ள உயிர்ச்சத்து E நம் தோல் மற்றும் தலைமுடிக்கு அதிகளவு நன்மை அளிக்கிறது. தோலில் சுருக்கங்கள் ஏற்படுவதைப் பிற்போட்டு , இயற்கையான முறையில் பளபளப்பான சருமத்தைப் பேண உதவுகிறது. எள்ளை எள் உருண்டை, எள் எண்ணெய், எள்ளை உணவின் மேல் தூவிச் சாப்பிடுவது. எள்ளுப்பொடி, துவையலாக எனப் பல வடிவங்களில்



உணவில் எடுத்துக்கொள்ளலாம். எள் முழுக்க முழுக்க ஊட்டச்சத்துக்களால் நிரம்பியது.கறுப்பு எள் இரத்தச் சக்கரை அளவைக் கட்டுப்படுத்தவும் மாதவிடாய் அறிகுறிகளைக் கட்டுப்படுத்தவும் உதவுகிறது. எள்ளு ஊற வைத்த நீரை குடிப்பதனால் உயர் ரத்த அழுத்தத்தை குறைக்கவும், நோய் எதிர்ப்பு ஆற்றலை அதிகரிக்கவும் உதவுகிறது. கல்லீரல், கணையம் மற்றும் என்புகளின் ஆரோக்கியத்தை அதிகரிக்க உதவுகிறது. கறுப்பு எள்ளில் உள்ள பொலிஅன்சாச்சுரேற்று கொழுப்பு மற்றும் அன்ரி ஒக்சிடன்கள் கெட்ட கொழுப்பின் அளவைக் குறைக்க உதவுகிறது. மற்றும் இதய நோய்களின் அபாயத்தைக் குறைக்கிறது. கறுப்பு எள் விதைகள் கல்சியத்தின் சிறந்த மூலமாகும். இது என்புகளை வலுவாகப் பராமரிக்கவும்,ஆஸ்டியோபோரோஸிஸ் போன்ற நிலைமைகளைத் தடுக்கவும் முக்கியமானது. கறுப்பு எள்ளில் இருக்கும் அதிகபடியான நார்ச்சத்துக்கள் செரிமானத்திற்கு உதவுகிறது. வழக்கமான குடல் இயக்கத்தை ஊக்குவிக்கிறது. மற்றும் மலச்சிக்கலைத் தடுக்கிறது. கறுப்பு எள்ளில் உயிர்ச்சத்து E காணப்படுவதால் முடியின் மயிர்க்கால்களுக்கு ஊட்டமளிக்கிறது. முடிவளர்ச்சியை ஊக்குவிக்கிறது. இரும்பு துத்தநாகம் மற்றும் செலினியம் போன்ற ஊட்டச்சத்துகளின் அதிக உள்ளடக்கம் காரணமாக முன்கூட்டியே நரை மற்றும் முடி உதிர்வைத் தடுக்கும் கறுப்பு எள்ளில் காணப்படும் உயிர்ச்சத்து B6 மற்றும் மக்னீசியம் போன்ற அத்தியாவசிய ஊட்டச்சத்துக்கள் மூளை ஆரோக்கியத்தை வலுப்படுத்துகிறது. இவ் எள்ளில் உள்ள அதிக நார்ச்சத்து இரத்தத்தில் சர்க்கரை அளவு திடீரென அதிகரிப்பதைத் தடுக்கிறது. மற்றும் இரத்தத்தில் சக்கரைக் கட்டுப்பாட்டை ஊக்குவிக்கிறது. கறுப்பு எள்ளில் உள்ள ஆக்ஸிஜனேற்றிகள், உயிர்ச்சத்துக்கள். மற்றும் தாதுக்கள் நோய் எதிர்ப்பு சக்தியை வலுப்படுத்த உதவுகிறது. மற்றும் நோய்த் தொற்றுக்கள், நோய்களிலிருந்து உடலைப் பாதுகாக்க உதவுகிறது. அத்துடன் பெண்களுக்கு ஏற்படும் ஒழுங்கற்ற மாதவிடாய் மற்றும் ஹார்மோன்கள் சமனிலையின்மை பிரச்சினைகளை நீக்க உதவுகிறது. அதாவது கறுப்பு எள் விதைகளில் அதிகளவு விற்றமின் B6 காணப்படுவதால் இது ஒரு பெண்ணின் மாதவிடாய் சுழற்சியின் போது, ஈஸ்டோரஜன் புஜெஜெஸ்டிரோன் சமனிலையைப் பராமரிக்க உதவுகிறது. மேலும் கறுப்பு எள்ளில் காணப்படும் ஒமெகா-3-கொழுப்பு அமிலங்கள் உடலுக்கு ஆற்றலை வழங்குவதில் முக்கிய பங்கு வகிக்கின்றன. தினமும் ஒருமேசைக்கரண்டி இலிருந்து 1 1/2 மேசைக்கரண்டி அளவு கறுப்பு எள் சாப்பிடலாம். சாதாரணமானவர்கள் தினமும் 1/2 தேக்கரண்டி அளவு கறுப்பு எள்ளும் சாப்பிடலாம். கர்ப்பிணித் தாய்மார்கள், பாலூட்டும் தாய்மார்களுக்கு கறுப்பு எள்ளு சிறந்த ஆரோக்கிய உணவாகும். எள்ளில் உள்ள மக்னீசியம் உயிர்ச்சத்து E, லிக்னின் இவை காணப்படுவதால் இரத்த அழுத்தத்தை அதிகரிக்காமல் தடுக்கக் கூடியது. எள்ளில் Sesamol எனும் லேதியற்சத்து எமது DNA இனைத் பாதுகாப்பதாகவும் இது Genetic Mutation இனைப் தடுப்பதாகவும் இதனால் புற்று நோய்க்கு கதிர்வீச்சு சிகிச்சை எடுப்பதால் ஏற்படும் பக்க விளைவுகளைத் தடுப்பதாகவும் ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவுடன் செய்த இரகசிய ஒப்பந்தம் என்ன?

## அநுர அரசின் குடுமியைப் பிடிக்கிறது எதிர்க்கட்சி

**(கொழும்பு)**

**இந்தியாவுடன் செய்து கொண்ட ஒப்பந்தங்கள் தொடர்பில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான அரசு இன்னும் பாராளுமன்றத்துக்கோ, நாட்டு மக்களுக்கோ தெரியப்படுத்தவில்லை.**

**அவ்வாறெனில் அரசு செய்யக் கூடாத ஒன்றைச் செய்துள்ளதா? தெரிந்தோ தெரியாமலோ எமது தாய் நாடு காட்டிக் கொடுக்கப்பட்டுள்ளதா என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் அஜித் பி பெரேரா கேள்வி எழுப்பினார்.**



கொழும்பில் நேற்று முன்தினம் சனிக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு கேள்வி எழுப்பினார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில், "இந்தியாவுடன் எத்தனை புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டுள்ளன? அவற்றின் உள்ளடக்கங்கள் எவ்வாறானவை? அவற்றுக்குச் சட்டமா அதிபரின் அனுமதி கிடைக்கப் பெற்றதா? அல்லது அமைச்சரவை அனுமதி கிடைத்ததா?

அவை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டதா? என்பது தொடர்பில் நாம் தொடர்ச்சியாகக் கேள்விகளை முன்வைத்தோம்.

கடந்த வாரம் பிரதமரிடம் இது குறித்து கேள்வி எழுப்பினோம். ஆனால், பிரதமருக்குப் பதிலாக சபை முதல்வர் எழுந்து தம்வசம் தகவல்கள் இல்லை என்றும், அதற்குச் சற்று கால அவகாசம் வேண்டும் என்றும் கூறினார்.

நாட்டில் பரவலான பேசுபொருளாக அமைந்த இந்த விவகாரம் தொடர்பில் தம்மிடம் தகவல் இல்லை என சபை முதல்வர் கூறுவது புதுமையாகவுள்ளது.

தகவல் அறியும் உரிமை சட்டத்தின் ஊடாக இந்த ஒப்பந்தங்களின் பிரதிகளை ஜனாதிபதி செயலகத்திடம் கோரிய போது, தம்வசம் அவை இல்லை என்ற பதிலே வழங்கப்பட்டது. எதற்காக இது குறித்த தகவல்கள் மறைக்கப்படுகின்றன?

அவ்வாறெனில் அரசு செய்யக் கூடாத ஒன்றைச் செய்துள்ளதா? தெரிந்தோ தெரியாமலோ எமது தாய் நாடு காட்டிக்கொடுக்கப்பட்டுள்ளதா? பாராளுமன்றத்தில் இந்த ஒப்பந்தங்கள் தொடர்பான ஆவணங்களை சமர்ப்பித்து, அவை குறித்த விவாதங்களை நிறைவுக்கு கொண்டு வர முடியுமல்லவா? ஆனால் அதற்கான தைரியம் அரசாங்கத்துக்கு இல்லை.

பாராளுமன்றத்தில் பல சந்தர்ப்பங்களில் நாம் இது குறித்து கேள்வி எழுப்பியிருக்கின்றோம். பாராளுமன்றத்தில் மாத்திரமின்றி பொதுமக்களும் இது தொடர்பில் கேள்வி எழுப்புகின்றனர் என்பதை அரசாங்கம் நன்கறியும் என அவர் தெரிவித்தார். (க-8)

## இந்தியாவிலுள்ள இலங்கை அகதிகளை சட்டரீதியாக அழைத்து வர ஏற்பாடு

### கடற்றொழில் அமைச்சர் சந்திரசேகரன்



(கொழும்பு)

இந்தியாவில் நீண்டகாலமாக தங்கியுள்ள இலங்கை அகதிகளை சட்டரீதியாக நாட்டிற்கு அழைத்து வருவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருவதாக கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்தார்.

இந்தியாவிலிருந்து கடல் வழியாக யாழ்ப்பாணம் வருகை தந்த ஒருவர் அண்மையில் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்ட விடயம் தொடர்பில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இந்தியாவில் தங்கியுள்ள இலங்கை அகதிகள் நாட்டிற்கு வருவதற்கு சட்டரீதியான ஆவணங்கள் பிரச்சினையாக உள்ள நிலையில் சிலர் கடல் வழியாக சட்ட விரோதமான முறையில் படகுகள் மூலம் நாட்டுக்கு வருகின்றனர்.

இந்தியாவுக்கு அகதிகளாகச் சென்றவர்களை சட்டரீதியாக நாட்டுக்கு அழைத்து வருவதற்கான ஏற்பாடுகளை வெளிவிவகார அமைச்சினூடாக எடுப்பதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் அரசாங்கம் மேற்கொண்டு வருகிறது.

ஆகவே இந்தியாவிலிருந்து படகுமூலம் சட்டவிரோதமான முறையில் இலங்கை திரும்ப வேண்டாம் எனக் கூறிய அவர் விரைவில் அவர்களை அழைத்து வருவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவித்தார். (க-8)

## இந்தியாவில் சடுதியாக அதிகரிக்கும் கொரோனா

(டில்லி)

இந்தியாவில் கடந்த 24 மணி நேரத்தில் 491 பேருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக இந்திய ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

இதுவரை 5,755 பேர் கொரோனா தொற்றினால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும். டில்லி, மஹாராஷ்டிரா, கேரளா உள்ளிட்ட பல மாநிலங்களில் மீண்டும் புதிய கொரோனா வகை தொற்று பரவ ஆரம்பித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

கொரோனா தொற்றுக்குள்ளானவர்களின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வரும் நிலையில் இந்தியாவில் கடந்த 24 மணி நேரத்தில் 491 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டதுடன் 4 பேர் உயிரிழந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (க-8)

## ஐந்து இலட்சம் பெறுமதியான பஞ்சவர்ணக் கிளி திருட்டு

(கொழும்பு)

தெஹிவளை தேசிய மிருகக்காட்சிசாலையில் நீலம், மஞ்சள் நிறம் கொண்ட பஞ்சவர்ணக் கிளியொன்று கடந்த 4 ஆம் திகதி இரவு திருடப்பட்டதாகக் கண்காணிப்பு கமராக்கள் மூலம் தெரிய வந்துள்ளது.

சுமார் ஐந்து இலட்சம் ரூபாவிற்கும் அதிக பெறுமதியுள்ள பஞ்சவர்ணக் கிளியே திருடப்பட்டுள்ளது.

குறித்த கூண்டில் 30 பஞ்சவர்ணக் கிளிகள் இருந்த நிலையில், அதிலிருந்து ஒரு கிளி காணாமற்போயுள்ளதாகக் கடமையிலிருந்த கூண்டின் பாதுகாவலர் தெரிவித்துள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக மிருகக்காட்சிசாலையின் நிர்வாகத்தினால் தெஹிவளை பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (க-8)

## செம்மணிப் புதைகுழி விவகாரம் வெளிப்படைத் தன்மை வேண்டும்

### மன்னிப்புச்சபை வலியுறுத்து

(யாழ்ப்பாணம்)

செம்மணிப் புதைகுழி தொடர்பான விசாரணையின் வெளிப்படைத்தன்மையை இலங்கை அரசு முன்வைக்க வேண்டும் என்று மன்னிப்புச் சபை வலியுறுத்தியுள்ளது.

யாழ்ப்பாணம், சித்துப்பாத்தியில் உள்ள இரண்டாவது செம்மணி மனித புதைகுழி என்று சந்தேகிக்கப்படும் இடத்தில் நடத்தப்பட்ட அகழ்வாராய்ச்சிகளில் இதுவரை 19 மனித எலும்புக்கூடுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இது இலங்கை உள்நாட்டுப் போரின் போது நடந்ததாகத் தெரிவிக்கப்படும் நீதிக்குப் புறம்பான கொலைகள் தொடர்பான நீண்டகாலமாக தாமதமாகி வரும் உண்மை மற்றும் நீதிக்கான தேடலில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தைக் குறிக்கிறது.

அத்துடன் பேராசிரியர் ராஜ் சோமதேவாவால் செயற்கைக் கோள் படங்கள் மூலம் அடையாளம் காணப்பட்ட சந்தேகத் திற்கிடமான அருகிலுள்ள பகுதிகள் ட்ரோன் மூலம் படம் பிடிக்கப்பட்டன. மேலும் அந்த காட்சிகள் பகுப்பாய்வுக்காக அவரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. அதற்கமைய அகழ்வாராய்ச்சியின் அடுத்த கட்டம் ஜூன் 26 இல் ஆரம்பிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

மனித உரிமைகள் அமைப்பான அம்னஸ்டி இன்டர்நேஷனல், சர்வதேச நடைமுறைகளுக்கேற்ப அகழ்வாராய்ச்சி நடத்தப்படுவதை உறுதி செய்யுமாறு இந்த அகழ்வுப்பணியில் வெளிப்படைத் தன்மையை உறுதிப்படுத்துமாறும் வலியுறுத்தியுள்ளது. (க-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டாம் தரமான மனிதர்களைக் கொண்டு முதல் தரமான அரசாங்கத்தை உருவாக்க முடியாது. – அரிஸ்ரோட்டில்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## கொடியவர்களிடம் அகப்பட்டிருந்த நம் நாடு

இளங்கோவடிகள் தந்த சிலப்பதிகாரம் எம் தமிழ் இனத்தின் பெரும் சொத்து.

அரசர் மகனாகப் பிறந்து துறவு பூண்ட இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தினூடாகக் கூறுவது அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்று என்பதாகும்.

ஆம், மாதவியுடன் வாழ்ந்த கோவலன் எல்லாம் இழந்து தன் மனையாள் கண்ணகியிடம் செல்கிறான்.

தன்னைப் பிரிந்து மாதவியுடன் வாழ்ந்த கோவலன் திரும்பித் தன்னிடம் வந்தபோது கண்ணகி கடிந்து கொள்ளவில்லை. அவனை ஏற்றுக் கொண்டாள்.

எல்லாம் இழந்து நிற்கின்ற கோவலன் சாதாரணமானவனன்று. மன்னர்களுக்கு கடன் வழங்குகின்ற அளவில் செல்வச் செழிப்போடு வாழ்ந்தவன்.

என் செய்வது. விதியின் விளையாட்டு அவனை ஏதுமற்றவனாக்கியது.

இங்குதான் கண்ணகி தன் கால் சிலம்பொன்றைக் கொடுத்து அதனை விற்று மீளவும் வர்த்தகத்தைத் தொடரலாம் என்கிறாள்.

கண்ணகி கொடுத்த கால் சிலம்பை விற்கச் சென்ற கோவலன், அரச காவலர்களால் கைது செய்யப்படுகிறான்.

அந்தோ! ஏலவே அரச மாளிகையில் காணாமல்போன கால் சிலம்பு அதுவென்று எண்ணியே கோவலனை அரச காவலர்கள் கைது செய்து அரண்மனைக்குக் கொண்டு செல்கின்றனர்.

செய்தி பாண்டிய மன்னனுக்குத் தெரிவிக்கப்படுகிறது.

மனச்சஞ்சலத்தில் இருந்த பாண்டிய மன்னன், சம்பவத்தை தீர விசாரிக்காமல், கோவலனைக் கொன்று சிலம்பைக் கொணர என்றான்.

அவ்வளவுதான். கோவலனுக்கு மரண தண்டனை வழங்கப்படுகிறது.

செய்தி கண்ணகியின் காதுகளைச் சென்றடைய, அது காறும் பொறுமையாக இருந்த கண்ணகி நெருப்பாக எழுந்து பாண்டிய மன்னனின் சபையை நோக்கிச் செல்கிறாள்.

அப்பெரும் சபையில் நின்று கோவலன் வசம் இருந்தது தன் சிலம்பு என்பதை நிரூபணம் செய்கிறாள்.

அவ்வளவுதான் பாண்டிய மன்னன் பதறிப் போகிறான். ஐயகோ! நானோ மன்னன் நானே கள்வன் எனக்கூறியவாறு நிலத்திடை வீழ்ந்து உயிர்துறந்து விடுகிறான்.

இங்குதான் அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும் என்ற உண்மையை இளங்கோவடிகள் தெட்டத்தெளிவாக எடுத்துக்கூறுகிறார்.

எனினும் நம் நாட்டை ஆட்சி செய்தவர்களின் இலட்சணங்களை நினைக்கும்போது தலைசுற்றுகிறது.

உண்மை. மகிந்த ராஜபக்ஷவின் காலத்தில் அமைச்சராக இருந்த மேர்வின் சில்வா இலஞ்ச ஊழல் செய்தமைக்காக சிறையில் அடைக்கப்பட்டிருந்தார்.

ஒரு முறை சமுர்த்தி உத்தியோகத்தர் ஒருவரை மரத்தில் கட்டிய மேர்வின் சில்வா இப்போது ஊழல் குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டார் என்றால் நிலைமை எப்படி என்பதைப் பாருங்கள்.

இதுதான் என்றால் இல்லை. ராஜபக்ஷ குடும்பத்தில் சமல் ராஜபக்ஷ மட்டும் பரவாயில்லை என்று நினைத்திருந்தவேளை, இல்லாத வீட்டுக்கு அவரும் நட்டஈடு பெற்றார் எனும்போதுதான் கொடியவர்களின் ஆட்சியில் இந்த நாடு இருந்தது என்ற உண்மை தெரியவருகிறது. அதேநேரம் அறம் கூற்றாகும் என்பதும் நிதர்சனமாகிறது.

# பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவை பலவீனப்படுத்த அரசாங்கம் முஸ்தீபு

## பாட்டலி சம்பிக்க ரணவக்க குற்றச்சாட்டு

சுயாதீன இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவை முழுமையாக பலவீனப்படுத்தி ஆணைக்குழுவின் அதிகாரங்களை நிதியமைச்சு மற்றும் வலுசக்தி அமைச்சுக்கு பொறுப்பாக்கும் முயற்சிகளை அரசாங்கம் முன்னெடுத்துள்ளது.

அரசாங்கத்தின் குறித்த முறையற்ற செயற்பாடுகளை நீதிமன்றத்தின் ஊடாக முறியடிப்போம் என ஐக்கிய குடியரசு முன்னணியின் தலைவரும் முன்னாள் மின்சாரத்துறை அமைச்சருமான பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது இது குறித்து மேலும் கருத்துரைத்த அவர்,

வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்டுள்ள மின்சார சபை திருத்தச் சட்டமூலத்தில் இலங்கைப் பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவை முழுமையாகப் பலவீனப்படுத்தும் ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

ஆணைக்குழுவின் அதிகாரங்களை நிதியமைச்சு மற்றும் வலுசக்தி அமைச்சுக்கு பொறுப்பாக்கும் முயற்சிகள் இந்தச் சட்டமூலத்தின் ஊடாக மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மின்கட்டணத் தீர்மானத்தில் பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவின் சுயாதீன தலையீடு தடுக்கப்பட்டுள்ளது. இலங்கை மின்சார சபை 2015 மற்றும் 2023 ஆம் ஆண்டு காலப்பகுதியில் பாரிய நிதி நெருக்கடியை எதிர்கொண்டது.

2015 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் எரிபொருள் மற்றும் மின்சாரத்துக்கு விலை நிர்ணயம் செய்யும் யோசனையைக் கொண்டு வந்தேன். இந்த யோசனைக்கு நிதியமைச்சு கடுமையான எதிர்ப்பை வெளிப்படுத்தியது.

எரிபொருள் ஊடாக கிடைக்கும் வரி வருமானத்தை அதிகரித்துக் கொள்வதற்காகவே நிதியமைச்சு கட்டண நிர்ணயத்துக்கு அன்று எதிர்ப்புத் தெரிவித்தது. அதன் பிரதிபலனை இன்று எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

2024 ஆம் ஆண்டு ஜூன் மற்றும் ஜூலை மாதக் காலப்பகுதியில் இலங்கை மின்சார சபை மொத்தக் கணக்கு முறைமை ஊடாக மின் கட்டணத்தை முறையைற்ற வகையில் அதிகரித்துக் கொள்ளும்நிலையை உருவாக்கியுள்ளது.

தற்போது மின் கட்டணத் திருத்தத்துக்கு இலங்கை மின்சார சபை முன்வைத்துள்ள வருமான விபரங்களில் வரவுக்கும் செலவுக்குமிடையில் பரஸ்பர வேறுபாடுகள் காணப்படுகின்றன.

கடந்த ஆறு மாதக் காலப்பகுதியில் இலங்கை மின்சார சபை அதிகளவில் இலாபமடைந்துள்ள நிலையில், முன்வைக்கப்பட்டுள்ள முன்மொழிவுகளில் பல குளறுபடிகள் காணப்படுகின்றன. இவை குறித்து பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு விசேட கவனம் செலுத்த வேண்டும் என்றார். (ந-4,7)

# தெல்லிப்பழை புற்றுநோய் வைத்தியசாலை முடங்கும் அபாயம்

## அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை

(தெல்லிப்பழை)

தெல்லிப்பழை புற்றுநோய் வைத்தியசாலையும் அதன் சேவைகளும் முற்றாக முடங்கும் அபாயத்தில் உள்ளதாக எச்சரிக்கை விடுத்துள்ள அரச வைத்திய அதிகாரிகள் சங்கம், புற்றுநோய் நிபுணர் வைத்தியர் கிருஷாந்தியின் பாதுகாப்பும் பணிச்சுதந்திரமும் உறுதி செய்யப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தியுள்ளது.

தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையின் அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் வெளியிட்ட செய்திக் குறிப்பில் இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் அந்த செய்திக் குறிப்பில்,

வடக்கு மாகாணத்தின் முக்கிய புற்றுநோய் சிகிச்சை மையமாக விளங்கும் தெல்லிப்பழை புற்றுநோய் வைத்தியசாலைக்கு எதிரான திட்டமிட்ட முயற்சிகள், தற்போது அதன் இயங்கு திறனை முற்றாகப் பாதிக்கும் நிலையினை நோக்கி நகர்ந்துள்ளன.

சுமார் 15 ஆண்டுகளுக்கு முன் பொதுமக்கள், தன்னார்வ அமைப்புகள் மற்றும் சில அனுசரணையாளர்களின் கடுமையான உழைப்பின் ஊடாக நிறுவப்பட்ட இவ்வைத்தியசாலை, இன்று வரை ஆயிரக்கணக்கான புற்றுநோயாளிகளுக்கு உயிருக்குப் போராடும் வாழ்வதார சிகிச்சையைக் வழங்கி வருகிறது.

ஆனால் அப்போதும் இப்போதும் தொடர்ந்து சிலர் மேற்கொள்ளும் மறைமுகமான நடவடிக்கைகள், வஞ்சகப் போக்குகள் மற்றும் திட்டமிட்ட இடையூறுகள் இதன் நிரந்தர மேம்பாட்டுக்கும் சேவைக்கும் பெரும் ஆபத்தை ஏற்படுத்தி வருகின்றன.

தற்போது, பல ஆண்டுகளாக புற்றுநோயாளர்களுக்காக அர்ப்பணிப்போடு பணியாற்றி வரும் புற்றுநோய் நிபுணர் வைத்தியர் கிருஷாந்திக்கு எதிராக நடக்கும் அவதூறு பரப்பல், சமூக மேடைகளிலான வசைபாடுகள் மற்றும் தனிப்பட்ட தாக்குதல்களை எமது சங்கம் கடுமையாகக் கண்டிக்கின்றது.

அவரை மனதளவில் பாதித்து, சேவையிலிருந்து பின்வாங்க வைக்கவே இது மேற்கொள்ளப்படுவதாக எமது சங்கம் தெளிவாக அறிந்து வருகின்றது.

இச்சவாலுக்கு உரிய சூழ்நிலை ஒரு சில தனிநபர்களின் துயரம் மட்டுமல்ல அதுவே நோயாளர்களின் உயிரிழப்புக்கும் வழிவகுக்கும். சமூக மருத்துவப் பின்னடைவுகளுக்கு இடமளிக்கும் நிலை ஆகும். இந்நிலையில் வைத்திய நிபுணர்களுக்கு எதிரான இத்தகைய களங்கப்படுத்தலானது ஏழை நோயாளர்களின் உரிமைகளை நேரடியாகத் தாக்குகின்றது.

அத்துடன் தெல்லிப்பழை புற்றுநோய் வைத்தியசாலையின் சேவைகள் குறைக்கப்பட்டு அதன் தரம் சிதைக்கப்படுவதற்கான பின்னணியில் நிர்வாக சீர்கேடுகள், ஊழல் மற்றும் சட்ட விரோத ஒழுங்குகள் செயற்படுவதாகவும் அவை உறுதியான தண்டனைவிதிகள் இன்றி தொடர்வதாகவும் எமது சங்கம் ஆழ்ந்த கவலையுடன் உன்னிப்பாக அவதானித்து வருகின்றது என்றுள்ளது. (ந-4,7)

## தீவக மக்களின் போக்குவரத்து குறித்து விசேட கலந்துரையாடல்

(வேலணை)

நெடுந்தீவு, நயினாதீவு உள்ளிட்ட தீவகப் பகுதிகளில் வதியும் மக்கள் எதிர்நோக்கும் போக்குவரத்துப் பிரச்சினைகள், எரிபொருள் பிரச்சினைகள் தொடர்பில் முக்கிய கலந்துரையாடல் ஒன்று நேற்று போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் விமானப் போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்க, கடற்தொழில் மற்றும் மீன்பிடி அமைச்சர் சந்திரசேகர் ஆகியோரது பங்களிப்புடன் வேலணைப்பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது.


இதன்போது குறிகாட்டுவான் இறங்குதுறை புனரமைப்பு மற்றும் மீள் உருவாக்கம் தொடர்பிலும் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

இச்சந்திப்பில் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் ம.பிரதீபன், வேலணைப் பிரதேச செயலர் வை.சிவகரன், பெற்றோலியக் கூட்டுத்தாபனத் தலைவர், வீதி அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர், துறைமுகங்கள் அதிகாரசபையின் தலைவர் உள்ளிட்ட அதிகாரிகளும் கலந்து கொண்டிருந்தனர். (ந-4,7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதுச்சேரி பயணம்

01






ஒரு காலத்தில் பயணக் கட்டுரைகள் நம் மக்கள் மத்தியில் மிகப்பெரும் ஆர்வத்தையும் வரவேற்பையும் பெற்றிருந்தன.

ஆனந்தவிகடனில் **மணியன்** எழுதுகின்ற பயணக் கட்டுரைகளுக்கு இருந்த மவுசை என்னவென்று சொல்வது. இப்போதெல்லாம் பயணக்கட்டுரைகள் நாம் மறந்தவற்றுள் ஒன்றாகிவிட்டன.

உண்மை. தகவல் தொழில் நுட்ப வளர்ச்சியும் சமூகவலைத் தளங்களின் ஊடுருவலும் சேர்ந்து பத்திரிகைகள், சஞ்சிகைகளை அலங்கரித்த பயணக்கட்டுரைகளுக்கு சமாதி கட்டிவிட்டன.

இருந்தும் புதுச்சேரி பயணக் கட்டுரை எழுத வேண்டும் என்ற நினைப்பிற்குள் புதுச்சேரி மாநிலத்தின் கட்டமைப்பும் அவ்வாறானதொரு மாநிலம் கூட எங்களுக்கு இல்லாமல் போனதே என்ற ஆதங்கமும் சேர்ந்து கொண்டன.

இதையும் கடந்து புதுச்சேரியில் எங்கள் கம்பவாரிதி இலங்கை ஜெயராஜ் அவர்களுக்கு இருக்கக்கூடிய அளப்பரிய மதிப்பும் மரியாதையும் கண்டு வியந்ததன் விளைவாகவும் புதுச்சேரிப் பயணக்கட்டுரையை எழுத வேண்டும் என்ற உத்வேகத்தைத் தந்தருளியது.



வானுயர்ந்த கட்டடங்கள்

இனிப் புதுச்சேரிக்குப் போகலாம்.

**புதுச்சேரி**

அந்நியர்களின் ஆட்சிக்கு இலங்கை மட்டுமல்ல, இந்தியாவும் ஆட்பட்டது. எனினும் இலங்கையில் போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் என்ற இனத்துவம் காலத்திற்கு காலம் ஆட்சி செய்ததைப் போல இந்தியாவின் நிலைமை இருக்கவில்லை.

மாறாக, இந்தியப் பிராந்தியங்களில் வெவ்வேறு காலனித்துவ நாடுகளின் ஆதிக்கங்கள் இருந்தன.

குறிப்பாக தமிழகத்தில் பிரிட்டிசாரின் ஆட்சி இருந்த அதேநேரம், புதுச்சேரிப் பிராந்தியம் பிரான்ஸ் நாட்டின் முழுக்கட்டுப்பாட்டில் இருந்துள்ளது.

பிரான்ஸ் நாட்டின் ஆட்சியில் புதுச்சேரி (Puducherry) பாண்டிச்சேரி (Pondicherry) என்றே அழைக்கப்பட்டது.

1947 ஒகஸ்ட் 15 இல் இந்தியாவிற்குச் சுதந்திரம் கிடைத்த போதும் புதுச்சேரி பிரான்ஸின் ஆட்சி அதிகாரத்தின் கீழ் இயங்கியது.

1954 ஆம் ஆண்டு ஒக்டோபர் 18 ஆம் திகதி புதுச்சேரியை பிரதிநிதித்துவப்படுத்தும் பஞ்சாயத்துக்களில் இருந்து 178 பேரிடம் வாக்கெடுப்பு நடத்தப்பட்டது.

இதில் 170 பேர் சுதந்திரத்திற்கு ஆதரவாகவும் 8 பேர் எதிராகவும் வாக்களித்தனர்.

இதன் காரணமாக 1954 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் முதலாம் திகதி புதுச்சேரிக்கு விடுதலை வழங்கப்பட்டது. இத்தினமே புதுச்சேரி மாநிலத்தின் சுதந்திர தினமாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை பிரான்ஸின் ஆட்சி அதிகாரத்திற்குள் இருந்த புதுச்சேரி 1962 இல் யூனியன் பிரதேசமாக இந்திய மத்திய அரசுடன் இணைக்கப்பட்டது.

முழுக்க முழுக்கத் தமிழ் மக்கள் வாழ்கின்ற புதுச்சேரியை தமிழ் நாட்டுடன் இணைப்பதற்கு தமிழக அரசுகள் கடும் பிரயத்தனம் எடுத்த போதிலும் அதனை புதுச்சேரி மக்கள் ஏற்றுக்கொள்ள வில்லை.


இதனால் சுமார் இருபது இலட்சம் மக்கள் தொகையைக் கொண்ட புதுச்சேரி தனித்துவமான ஆட்சி அதிகாரத்தைக் கொண்டமைந்த மாநிலமாக இயங்கி வருகிறது.

ஆம், புதுச்சேரி மாநிலத்தில் இறங்கி, அதன் வரலாற்றை அறிந்த போது எங்கள் தமிழர் தாயகமும் இப்படியொரு மாநிலமாக ஆக்கப்பட்டிருந்தால், நம் தமிழ் மக்களும் நிம்மதியாக இருந்திருக்க முடியுமே என்ற நினைப்பு எம்மை ஆட்கொள்ள, புதுச்சேரி மாநிலத்தை அலங்கரித்து நிற்கும் மிகப் பழமை வாய்ந்த வானுயர் கட்டிடங்களை அண்ணாந்து பார்த்தோம்.

அதற்குள் கட்டடங்களின் உயரம் மட்டுமல்ல, எங்களின் வெறுமையும் வானத்தை நோக்கி இறைவா! எங்களை மட்டும் ஏன் இப்படிச் செய்தாய் என்று நினைக்க வைத்தது.

**புதுச்சேரியின் விஸ்தீரணம்**

பாண்டி அல்லது புதுவை எனச் சுருக்கமாக அழைக்கப்பட்ட புதுச்சேரி மாநிலம் 2006 ஆம் ஆண்டில் இருந்தே புதுச்சேரி எனப் பெயர் சூட்டப்பட்டது.




19.54 $KM^2$ நில அளவைக் கொண்டமைந்த இந்த மாநிலத்திற்குள்ளேயே நாகபட்டினத்திற்கு அருகாமையில் உள்ள காரைக்கால் நகரும் கேரள மாநிலத்தின் கோழிக் கோட்டிற்கு அருகில் உள்ள மாஹே நகரும் அடங்குகின்றன.

சுமார் 20 இலட்சம் மக்கள் தொகையைக் கொண்ட இந்த மாநிலத்தின் அரச அலுவல்கள் மொழியாக தமிழும் ஆங்கிலமும் இருப்பதுடன் கூடுதல் அலுவலக மொழியாக பிரெஞ்சு இருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

இதேவேளை புதுச்சேரி மாநில மக்களின் மொழி நடைப் பிரயோகத்தில் பிரஞ்சுமொழிக் கலப்பு இருப்பதும் இங்கு சுட்டுதற்குரியது.

(தொடரும்)

**புருசோத்தமன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொவிட் திரிபு...

அமைச்சின் தொற்று நோயியல் பிரிவின் மருத்துவ நிபுணர் அதுல லியன பத்திரன மேலும் தெரிவித்துள்ளதாவது,

தற்போது பரவிவரும் கொவிட் - 19 திரிபுகளுக்குக் கடுமையான நோய் நிலைமைகளை ஏற்படுத்தக்கூடிய இயலுமைகள் கிடையாது.

2023ஆம் ஆண்டு மே மாதத்தின் பின்னர் கொவிட் தொற்றை சாதாரணமாக ஒரு சுவாச நோயாக உலக சுகாதார நிறுவனம் வகைப்படுத்தியுள்ளது.

சாதாரண சுவாச நோய்க்கான அறிகுறிகள் தவிர மற்றும்படி வேறு எந்த அறிகுறிகளையும் கொண்டிராதமையினால் சுவாச நோய்களில் ஒன்றாக கொவிட் அடையாளப்படுத்தப்பட்டுள்ளது.

எனவே சுவாச நோய்களைக் கொண்டிருக்கும் ஒருவர் சுவாசிப்பதில் சிரமத்தை எதிர்கொண்டால் மருத்துவ சிகிச்சைகளைப் பெறுவது பொருத்தமானதாக இருக்கும்.

இது குறித்து வீண் அச்சம் தேவையில்லை என்றார்.

அண்மையில் கொரோனாவின் புதிய திரிபு இலங்கையில் அடையாளம் காணப்பட்டதைத் தொடர்ந்து முகக் கவசங்களுக்குப் பாரிய தட்டுப்பாடு ஏற்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ந-7,4)

## புதிய எரிபொருள்...

சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்க, மின்சாரம் மற்றும் எரிசக்தி அமைச்சர் குமார ஜெயக்கொடி ஆகியோர் குறித்த சேவையை ஆரம்பித்து வைத்தனர்.

இதன் அடுத்த கட்டமாக யாழ்ப்பாணத்திற்குப் புகையிரதத்தில் எரிபொருட்களை எடுத்து வருவதற்கான முயற்சிகள் விரைவில் ஆரம்பிக்கப் படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நிகழ்வில் கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் ஜனக ராஜ கருணா தேசிய மக்கள் சக்தியின் யாழ். பாராளுமன்ற உறுப்பினர்களான கருணைநாதன் இளங்குமரன், சண்முகநாதன் ஸ்ரீபவானந்தராஜா, ஜெயசந்திரமூர்த்தி ரஜீவன் ஆகியோரும் தேசிய மக்கள் சக்தியின் வலி. வடக்கு பிரதேச சபை உறுப்பினர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ந-7,4)

## புகையிரத பொதி...

வைக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்துள்ள போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்க, மின்சாரம் மற்றும் எரிசக்தி அமைச்சர் குமார ஜெயக்கொடி ஆகியோரால் குறித்த சேவை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

அதேவேளை புகையிரத நிலையத்தில் நூலகம் ஒன்றினையும் அங்குரார்ப்பணம் செய்து வைத்தனர். அதனைத் தொடர்ந்து புகையிரத நிலைய வளாகத்தில் மரக்கன்றுகளையும் நாட்டி வைத்தனர். (ந-7,4,33)

## ஐ.நா மனித...

உரிமைகள் உயர்ஸ்தானிகர் வோல்கர் டேர்க்கின் உலகளாவிய மனித உரிமைகள் நிலைவரம் தொடர்பான அறிக்கையுடன் ஜெனிவாவில் ஆரம்பமாகவிருக்கும் இக்கூட்டத்தொடரின் விடயதான மற்றும் நேர ஒழுங்கு அட்டவணையில் இலங்கையுடன் தொடர்புடைய விடயங்கள் உள்வாங்கப்படவில்லை.

இந்நிலையில் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் நடைபெறவுள்ள மனித உரிமைகள் பேரவையின் 60ஆவது கூட்டத்தொடரிலேயே இலங்கை தொடர்பில் உயர்ஸ்தானிகரின் வாய்மொழிமூல அறிக்கை வெளியிடப்பட விருப்பதுடன், புதிய தீர்மானமொன்றைக் கொண்டுவருவது குறித்தும் ஆராயப்படும் எனத் தெரியவருகிறது. (ந-7,4)

## வடக்கில்...

10 நாட்களுக்கு பிற்பகலில் அல்லது இரவு வேளைகளில் அவ்வப்போது மிதமான மழை கிடைக்கும் என யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் புவியியற்றுறைத் தலைவர் சிரேஷ்ட விரிவுரையாளர் நாகமுத்து பிரதீபராஜா குறிப்பிட்டுள்ளார். (ந-7,4)

## இல்லாத...

அரகலய போராட்டத்தால் சேதமேற்பட்டுவிட்டதாகக் கூறி 15.2 மில்லியன் ரூபாயை நட்டஈடாகப் பெற்று மோசடி செய்த குற்றச்சாட்டில் சமல் ராஜபக்ஷ விரைவில் கைது செய்யப்படவுள்ளதாக அரச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது,

மகிந்த ராஜபக்ஷ ஆட்சியில் சபாநாயகராக இருந்த சமல் ராஜபக்ஷ, 2022ஆம் ஆண்டு இடம்பெற்ற அரகலயப் போராட்டத்தின்போது திஸ்ஸ மஹாராம, மாகம பகுதியிலுள்ள தனது வீடு சேதமடைந்ததாக முறைப்பாடு செய்து அரசாங்கத்திடமிருந்து 15.2 மில்லியன் ரூபாயை நட்டஈடாகப் பெற்றிருந் தார்.

எனினும் சமல் ராஜபக்ஷ குறிப்பிட்ட இடம் அவருக்குச் சொந்தமானது இல்லை என்பதும், அங்கு வசிப்பிடம் எதுவும் இல்லை எனவும், வெறுமனே ஒரு நெல் சேமிப்புக் களஞ்சியம் மட்டுமே இருப்பதும் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சொத்து தனது கட்டுப்பாட்டில் உள்ளதாக சமல் ராஜபக்ஷ சத்தியப் பிரமாணம் செய்து அளித்திருந்த போதிலும், மேற்கொண்ட விசாரணைகளில் அந்த நிலம் வேறு ஒருவரின் பெயரில் பதிவு செய்யப்பட்டது தெரியவந் துள்ளது.

2023 ஜூலை மாதம் வெளியான மதிப்பீட்டு அறிக்கையில், அந்த இடத்தில் 14.8 மில்லியன் ரூபாய் மதிப்புள்ள வீடு இருந்ததாகவும் நெல் களஞ்சியத்துக்கு 222,600 ரூபாய் சேதம் ஏற்பட்டதாகவும் கூறப்பட்டிருந்தது.

ஆனால், பொது நிர்வாக அமைச்சு தங்கள் அதிகார வரம்பில் இந்த இழப்பீடு வழங்கப்பட முடியாது எனத் தொடர்புடைய அதிகாரிகளுக்கு அறிவித்திருந்தது. இருப்பினும், முழுத் தொகையும் வழங்கப்பட்டதாகத் தெரிகிறது.

இந்நிலையில், குறித்த மோசடிக் குற்றச்சாட்டின் பேரில் லஞ்ச அல்லது ஊழல் விசாரணை ஆணையத்தால் சமல் ராஜபக்ஷ விசாரிக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே இந்த நிதியைச் செலுத்துவது தொடர்பான சட்டம் மற்றும் சுற்றறிக்கைகளுக்கு மாறாகச் செயற்பட்ட அரச அதிகாரிகள் மீது எதிர்காலத்தில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-7,4)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127

மஹஜன சம்பத
திகதி 2025.06.08
சீட்டிழுப்பு இலக்கம் 5854
L 6 4 4 1 9 1
அத சம்பத L 4 1 9 1
சீட்டிழுப்பு இலக்கம் 0429
National Lotteries Board

தன நிதானய
திகதி - 2025.06.08
சீட்டிழுப்பு இலக்கம் - 1884
Z 07 11 38 81 Z
Double Chance 10097

மெகா பவர்
திகதி 08/06/2025
சீட்டிழுப்பு இலக்கம் 2202
R 06 11 29 51 56

ஜய ஜய JAYA
திகதி 2025.06.08
சீட்டிழுப்பு இலக்கம் 0122
L 4 2 3 0

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 4096
சீட்டிழுப்பு திகதி 08.06.2025
A 17 38 44 47
A
தேசிய லொத்தர் சபை

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2025.06.08
சீட்டிழுப்பு இலக்கம் 1163
விருச்சிகம் 14 20 33 51 விருச்சிகம்
47290 49

சுபிர வசனா
உத்தியோகபூர்வ முடிவுகள்
08.06.2025 வெற்றி வாரம் 562
S 6 3 7 7 3 7
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.20.803,729.20
67378
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2828
சீட்டிழுப்பு திகதி 2025.06.08 தினம் ஞாயிற்றுக்கிழமை
13 63 65 74 Y
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.67,055,733.60

சனிதா
திகதி 08.06.2025 வெற்றி வாரம் 4989
28 45 60 72 Y
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 66,608,395.20
74321

சசிரி
700
08.06.2025 ஞாயிற்றுக்கிழமை
14 44 47
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.2,000,000.00

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4540
சீட்டிழுப்பு திகதி 08.06.2025 தினம் ஞாயிற்றுக்கிழமை
14 37 49 51 கும்பம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.3,214,891.20
104721

கப்றுக
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
X 19 10 34 62 64
2004 08.06.2025
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.577,505,629.80

அத கோடிபதி ADA KOTIPATHI
ஞாயிற்றுக்கிழமை
வெற்றி வாரம் : 2654
சீட்டிழுப்பு திகதி : 2025.06.08
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.61,211,692.80
07 19 51 69 V
284827

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## வவுனியா...

மரத்தில் தூக்கில் தொங்கியவாறு சடலமாகக் காணப்பட்டுள்ளார்.

இது தொடர்பில் பொலிஸார் மற்றும் கிராம சேவையாளருக்குக் கிடைக்கப் பெற்ற தகவலுக்கமைய சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் சடலத்தை மீட்டதோடு இளைஞரின் மரணம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

(ந-7,4,250)

## தமிழரசுக் கட்சி...

செயலாளர் எக்ஸ்.குலநாயகம் ஆகியோரின் பங்கேற்புடன் நடைபெற்ற குறித்த நிகழ்வில் மாகாண சபை முன்னாள் உறுப்பினர்கள், கட்சியின் தொகுதி அமைப்பாளர்கள், ஆதரவாளர்கள் கலந்துகொண்டனர்.(ந-7,4,33)

## வருகிறார்...

எதிர்வரும் 26 ஆம் திகதி வரை இலங்கையில் தங்கியிருக்கும் மனித உரிமைகள் ஆணையாளர் வோல்கர் டேர்க், ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, பிரதமர் ஹரிணி அமரசூரிய மற்றும் வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் உட்பட அரச தரப்புகளை கொழும்பில் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளதுடன், எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ மற்றும் சிறுபான்மை கட்சிகளின் பிரதிநிதிகள், மனித உரிமைகள் செயற்பாட்டாளர்கள் என பலதரப்பையும் சந்தித்து பொறுப்புக்கூறல் முன்னேற்றங்கள் குறித்து கலந்துரையாடவுள்ளார்.

இதேவேளை, யாழ்ப்பாணம் மற்றும் முல்லைத்தீவு ஆகிய பகுதிகளுக்குச் சென்று நேரடியாக நிலைமைகளை ஆராயவுள்ளதுடன், உள்நாட்டுப் போரின் போது வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்களைச் சந்தித்திக்கவும், விஜயத்தின் இறுதியில் கொழும்பில் ஊடகவியலாளர்களை சந்திக்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் இடம்பெறவுள்ள ஜெனிவா மனித உரிமைகள் மீளாய்வு கூட்டத்தொடரில் இலங்கைக்கு எதிரான தீர்மானம் முன்வைக்கப்படவுள்ள நிலையில், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் வோல்கர் டேர்க் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்கின்றமை குறித்து அரசாங்கம் கூடுதல் அவதானம் செலுத்தியுள்ளது.

குறிப்பாக இறுதிக்கட்டப் போரில் இடம்பெற்றதாகக் கூறப்படுகின்ற பாரதூரமான மனித உரிமை மீறல்களுக்கு பொறுப்புக் கூறும் வகையில் இலங்கைக்கு எதிராக வெளியக சர்வதேச விசாரணை ஒன்றுக்கான தீர்மானமாக எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் ஜெனிவா மீளாய்வுக் கூட்டத்தொடரில் முன்வைக்கப்படவுள்ளது. பிரித்தானியா தலைமையில் குறித்த தீர்மானம் கொண்டுவரப்படவுள்ளதாக ஏற்கனவே தகவல்கள் வெளியாகியுள்ளன. இதற்கு ஆதரவாக ஐக்கிய நாடுகள் சபையில் சிறப்பு அந்தஸ்து கொண்ட சர்வதேச அமைப்புகள் மற்றும் நாடுகள் ஆதரவளித்து வருகின்றன.

இதன் பிரகாரம் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் இலங்கை குறித்து வலுவானதொரு தீர்மானம் பிரித்தானியா தலைமையில் முன்வைக்கப்படவுள்ளது. இந்த நெருக்கடியை தவிர்க்கும் வகையில், நட்பு நாடுகள் பலவற்றுடன் அரசாங்கம் கலந்துரையாடல்களை ஆரம்பித்துள்ளது. இருப்பினும் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை இரத்து செய்தல், வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களுக்கான பொறுப்புக் கூறல், போர் குற்றச்சாட்டுக்களை விசாரித்து உண்மையைக் கண்டறிதல் மற்றும் மீள்நிகழாமையை உறுதி செய்தல் என்பன சர்வதேசத்தின் அழுத்தங்களாகவுள்ளன.

இதனைப் பின்னணியாகக் கொண்டே தான் வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத், உள்ளக பொறிமுறை ஒன்றின் கீழ் இலங்கைக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் விசாரிக்கப்படும் என்று 58 ஆவது அமர்வில் கலந்துகொண்டு குறிப்பிட்டிருந்தார்.

(ந-4,7)

## அநுராதபுரம் சிறைச்சாலை அத்தியட்சகர் கைது

(அநுராதபுரம்)

அநுராதபுரம் சிறைச்சாலை அத்தியட்சகர் நேற்று (8) குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டார்.

ஜனாதிபதி பொது மன்னிப்பை தவறாகப் பயன்படுத்தி ஏனைய கைதிகளை விடுவித்தமை தொடர்பாக, குற்றப் புலனாய்வுப் பிரிவினர் முன்னெடுத்து வரும் விசாரணைகளுக்கு அமைவாக குறித்த கைது நடவடிக்கை இடம்பெற்றுள்ளது.

(ந-4,7)

## முறைகேடாக...

விசாரணைகளை மேற்கொண்டுள்ளது.

அதன் முதற்கட்டமாக சிறைச்சாலை ஆணையாளர் நாயகத்திடம் இவ்விடயம் குறித்து வாக்குமூலம் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

அநுராதபுரம் மேல் நீதிமன்றத்தால் நீதிக்குற்ற வழக்கில் சிறைத்தண்டனை தீர்ப்பளிக்கப்பட்ட கைதிக்கு ஜனாதிபதி பொதுமன்னிப்பு வழங்கப்பட்ட விவகாரம் கடும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ந-4,7)


**விற்பனைக்குண்டு**

அரைக்கும் ஆலைக்குரிய இயந்திரங்கள் விற்பனைக்கு உண்டு. மாலுசந்தி அல்வாய் வீதியில்.

தொடர்புகளுக்கு : 077 604 7786 (1206)

**மருந்தாளர் (Pharmacist) தேவை**

நெல்லியடியில் மருந்தகத்திற்கு ஒரு மருந்தாளர் தேவை.

தொடர்புகளுக்கு : 075 084 4662 (C-3162)

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**




எமது பாடசாலையின் உதவி அதிபர்

திருமதி குமுதா குமணன்

அவர்கள் இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவை ||| பதவி உயர்வு பெற்றுள்ளார். அவரை பாராட்டி வாழ்த்துவதோடு மேலும் பல பதவியுயர்வுகளைப் பெற வாழ்த்துகின்றோம்.

ஆசிரியர் நலன்புரிக் கழகம்
யா/மகாஜனக் கல்லூரி
தெல்லிப்பளை

(C-3161)




வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

**ஆகாஸ் நகை மாடம்**

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-3163) 076 825 7716 (ஆகாஸ்)

**உங்கள் ஜாதகம் சொல்லும் உங்கள் எதிர்காலம்!**

"வேலை கிடைக்கலையா?
திருமண பந்தம் தடைப்பட்டுள்ளதா?
சந்தோஷமில்லாத வாழ்க்கையா?"

உங்கள் ஜாதகத்தில் பதில்கள் உள்ளன! இன்றே உங்கள் ஜாதகத்தை ஆராயுங்கள் - தீர்வுகளைத் தேடுங்கள்.

அழையுங்கள் : 074 177 1588 (1213)

சுத்தமான, சுகாதாரமான முறையில் பறிக்கப்பட்ட தரமான வேப்பம்பூ கொள்வனவு செய்யப்படும்



கொள்வனவு விலை 1Kg - 400/-

தேவைப்படும் அளவு 100Kg

மொத்தமாகவோ அல்லது சிறு அளவிலோ கொள்வனவு செய்யப்படும் (C-3164)

தொடர்புகளுக்கு : 077 590 2467

**கனடா - வரி இல்லாமல் விரைவு பொதிகள் சேவை**

5-9 Kg 3970/-
11-16 Kg 2800/-
21-30 Kg 2640/-

குறைந்த விலை - நிறைந்த சேவை
கருவாடு, மருந்து வகைகள், எண்ணெய் வகைகள் அனுப்பலாம்
14 நாட்களில் Delivery

UK 11Kg - 1420/- France 11Kg - 2220/- Germany 11Kg - 2020/-
Swiss 11Kg - 2510/- Australia 11Kg - 1980/- Italy 11Kg - 2250/-

V2 TRAVELS 076 822 6241 076 822 6237

**இலவச மருத்துவ முகாம்**

எமது வைத்தியசாலையின் 15 ஆவது வருட பூர்த்தியை முன்னிட்டு




2025.06.10 செவ்வாய்க்கிழமை காலை 8 Am - 11.30 Am வரை கெங்காதரன் வைத்தியசாலையில் இலவச மருத்துவ முகாம் நடைபெறவுள்ளது. ஆகையால் உங்களுக்கு தேவையான மருத்துவ ஆலோசனைகளையும் மருத்துவ வசதிகளையும் பெற்றுக்கொள்ளலாம்.

வண். மேற்கு வைத்தியசாலை

இல.60, ஐயனார் கோவிலடி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். T.P : 021 222 1697 (4499)

**உடனடி விற்பனைக்கு**

புத்தம் புதிய பலட் றக் (Hand pallet truck - 2.5 தொன்) விற்பனைக்கு உண்டு.



தொடர்புகளுக்கு : 076 097 3121 (இ)

எமது 50 வருட சேவையின் ஓர் அங்கமாக பொருளாதார வாழ்வியல் இடர்களுக்கு முகம் கொடுக்கும் குடும்பங்களுக்கு தமது இறுதி மரியாதையையும் கடமையையும் செய்யக்கூடிய வகையில்

**பரிபூரணம்**

சேவையை நாம் எம் மக்களுக்காக ஆரம்பித்துள்ளோம். ரூபா 35,000/- முதல் இறுதிச் சடங்கிற்கு ஏற்ற மரப்பேழை, வாகனம், உடல் பதப்படுத்தல் மற்றும் இதர சேவைகளும் ஏற்றுக்கொள்ளப்படும்.

விபரங்களுக்கு : ஈ - சன்ஸ் அந்தியகால சேவை
இல.148, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
021 222 2695, 077 429 0613 (C-3156)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தினால் ... முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 09.06.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.